ஸ்ரீ சிவகவச ஸ்தோத்ரம்

S. சங்கரநாராயணன், M.A.

கிரி ப்ரஸ்

திருவல்லிக்கேணி :: மதராஸ்.

எமது அடுத்த பிரசுரம்

(அச்சில்)

ஸ்ரீமான் T. K. பத்மனுபன்
அவர்களால் எழுதப்பட்ட

ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீ சிவானந்தலஹரீ

(சம்ஸ்க்ருதம், தமிழ் லிபிகளில் ச்லோகங்களும் ப்ரதிபத அர்த்தத்துடனும் விரிவான தாத்பர்யத்துடனும்)

ஸ்ரீ சிவகவச ஸ்தோத்ரம்

ஸ்ரீ ராம ஜயம்
ஆனி மீ 3 உ

S. சங்கரநாராயணன், M.A.

பதிப்பாளர் :

கிரி ப்ரஸ்

திருவல்லிக்கேணி :: மதராஸ்.

FIRST
EDITION
March '54

Publication No. 22

All Rights Reserved

Price 1/2
~~Annas 10~~

Printed & Published
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane : : Madras.

பதிப்புரை

ஸ்ரீ சிவகவச ஸ்தோத்ரம் சிவ பக்தர்கள் அனைவரும் தினந்தோறும் பாராயணம் பண்ணும் ஸ்துதி. தினந்தோறும் சொல்லி அவை மிகவும் பழக்கப்பட்டு விட்டதால் அவற்றின் உட்பொருளைப்பற்றிச் சிந்திப்பதற்கே நமக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நமது பெரியோர்கள் மிகவும் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட ஸ்துதிகளையே நமது பாராயணத்திற்கென்று வைத்திருக்கிறார்கள். அவற்றின் கருத்துக்களை விரிவாக எழுதி வெளியிட்டால் எல்லோருக்கும் ப்ரயோஜனமாயிருக்கும் என்று ஆசிரியரைக் கேட்டுக்கொண்டோம். தமிழர் தந்தையாகிய சிவபெருமானைக் குறித்து வடமொழி ஸ்தோத்ரங்கள் என்ன கூறுகின்றன என்பதை தமிழர்கள் அறிந்துகொள்ளவும் இது ஓர் சந்தர்ப்பமளிக்கும்.

இதுபோன்ற விஷயங்களில் பழக்கமில்லாதவரும் புரிந்துகொள்ளுமாறு மிக எளிய நடையில் விளக்கமாக விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார் ஆசிரியர். உதாரணமாக பரமசிவனின் பஞ்சமூர்த்திகளைப் பற்றிய தத்துவத்தை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். ஸ்தோத்திரங்களுக்கு முன்னால் இவர் கொடுத்திருக்கும் "கவசம்: அதன் பொருளும் பயனும்" என்னும் கட்டுரை பல அரிய உண்மைகள் அடங்கியது. ஸ்தோத்திரங்களைப் படிக்குமுன் இக்கட்டுரையைப் படிப்பது அவற்றின் மாபெரும் சக்தியை உணர்வதற்கு உபயோகமாயிருக்கும்.

கடைசியாகவுள்ள தண்டகத்தில் வடமொழியிலுள்ள சக்தி தமிழிலும் ஒருவாறு பிரதிபலிக்கச் செய்திருக்கிறார்.

K. **கைலாஸம் அய்யர்,**
பதிப்பாளர்.

பொருளடக்கம்

		பக்கம்
கவசம்: அதன் பொருளும் பயனும்		v
கவச ஸ்தோத்திரம்	...	1
தண்டகம்	...	55
பலச்ருதி	...	62

கவசம்: அதன் பொருளும் பயனும்

* * *

கவசம் என்றால் என்னவென்று நாம் அறிவோம். போர்க்களத்தில் சண்டையிடுவோர் தம்மை எதிரிகளிடமிருந்தும் அவர்களது ஆயுதங்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள வேண்டி தம் உடலைச் சுற்றி அணியும் ஓர் தகர்க்க முடியாத உறை. பழைய காலங்களில் இதை இரும்பு முதலிய உலோகங்களால் செய்தனர். இக்காலத்தில் இதை வேறு விதமாகச் செய்யலாம். நமது ஆராய்ச்சி அதுபற்றியதல்ல. தெய்வ வழிபாட்டில் வழி காட்டும் சாஸ்திரங்களில், கவசங்கள் என்று சில சக்தி வாய்ந்த ஸ்தோத்திரங்கள் இருக்கின்றனவே, அவைகளின் அவசியமென்ன, உட்பொருளென்ன, அவைகளுக்கு அவ்வாறு பெயர் வரக் காரணம் யாது என்று இங்கு ஆராய முற்படுவோம்.

கவசத்தின் பொருள் என்ன ?

நம் நாட்டில், வேதகாலம் தொட்டு, நமக்குக் கிடைத்துள்ள முக்கியமான ரகசிய போதனை இது: நமது வாழ்க்கை ஓர் பெரும் போராட்டம், இந்த மானிட உலகு ஓர் பெரும் யுத்த களம். உண்மை, ப்ரகாசம் இவற்றின் சக்திகளும், பொய், இருள் இவற்றின் சக்திகளும் நம் மானிட உலகை வசப்படுத்தி ஆட்கொள்ள, ஸதா போராடிக் கொண்டே இருக்கின்றன. இந்த இருள் சக்திகள் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. வேதத்தில் விருத்திரன், வலன், பணி, தஸ்யு என்றும், புராணங்களில் அசுரன், தானவன் என்றும், இதிஹாஸங்களில் ராக்ஷஸன், பிசாசன் என்றும் பலவிதமாகக் கூறப்படுகின்றன. வெளிச்சம் நம் கண்ணுக்

வாழ்வுப் போராட்டம்

குத் தென்படாதபடி எங்கும் இருளைப் பரப்புவது, உண்மையைப் பொய்யால் மூடி மறைப்பது, ஆனந்தத்தை சிதைத்து அதை துக்கமாக்குவது, அமரத் தன்மையை மறைத்து வைத்து மரணம்தான் இயற்கை நியதி என்று தோன்றும்படி செய்வது—இவையே இச் சக்திகளின் முக்கிய வேலை.

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இப் பெரும் போர், தேவாசுர யுத்தம், ஒவ்வொரு கணமும், நடந்த வண்ணம் இருக்கின்றது. அவனது மனோ ராஜ்யத்தில் இந்த இரு தரத்தாரின் சைனியங்களும் கை கலந்து ஸதா சண்டையிடுகின்றன. தேவன் குடிகொண்டுள்ள ஹ்ருதயக் கோட்டையை முற்றுகையிட்டு இந்த அசுர சக்திகள் அவனை வெளிக் கிளப்ப முயற்சிக்கின்றன. உதாரணமாக ஒருவன் உண்மையே பேசவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டால் உடனே அவன் பொய் பேசித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன. ஓர் நல்ல காரியம் செய்யவேண்டுமென்றால் உடனே எங்கிருந்தோ இடையூறுகள் மலைபோல் குறுக்கே முளைக்கின்றன. இவ்வாறு, இயல்பாகவே தெய்வத் தன்மை வாய்ந்த மனிதனை தங்கள் கோஷ்டியில் ஒருவனுக்க இந்த அசுர சக்திகள் முயற்சித்த வண்ணம் இருக்கின்றன. அது மட்டுமல்ல; இம்மானிட உலகையும் தங்களது ராஜ்ஜியமாக்கப் பாடுபடுகின்றன.

இரு கட்சிகள்

மானிட உலகிலும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இவ்வாறு ஓர் போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது என்று நாம் உணர்ந்தாலே போதும், அதுவே ஓர் பெரிய சாதனை. அநேகருக்கு தங்கள் புறக் கண்ணால் பார்ப்பதை விட வேறு காட்சிகள் இருக்கின்றன என்றே தெரியாது. அவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எண்ணி ஆடு

உணர்வது முக்கியம்

மாடுகள் போல் ஒருவித வாழ்வு நடத்தி மிகத் திருப்தி அடைந்து வெகு வேகமாக முன்னேறிக்கொண்டே இருக்கிறார்கள்; எதைக் குறித்து முன்னேறுகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது, அதைப்பற்றிக் கவலை கொள்வதும் இல்லை. அவர்களது வாழ்வில் அவர்களுக்குப் பிடித்தது நடந்தால் அது தங்கள் பிரபாவத்தால் நடந்தது என்பதும், பிடிக்காதது நடந்தால் அது விதியின் கொடுமை என்பதும் அவர்களது திட்டமான அபிப்பிராயம். தேவாசுர யுத்தம் என்பதெல்லாம், ஏதோ சிலர் தாங்கள் ஏமாந்தது போதாது என்று பிறரையும் ஏமாற்ற வேண்டி எழுதி வைத்துவிட்டுச் சென்ற கட்டுக்கதைகள் என்பதே அவர்கள் நிர்மானமான கொள்கை. ஆகவே மனிதன் இந்த மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, ஓர் பெரும் போராட்டம் தன்னுள்ளும் வெளியிலும் நடக்கின்றது என்று அறிவதே யோகம், ஞானம் இவைகளால் ஏற்படும் அறிவின் முதற்படி.

யார் பக்கம் சேர வேண்டும்?

இவ்வாறு மனிதன் உணர்ந்தால்தான், தனது செய்கைகள் யாரை பலப்படுத்துகின்றன, தான் சண்டையில் யார் பக்கம் இருக்கிறோம் என்பதை உணர முடியும். அவன் இவ்விதம் உணராவண்ணம், அசுர சக்திகள் சூழ்ச்சி செய்து அவனை எப்போதும் அறியாமையிலேயே வைத்திருக்கின்றன. ஏனெனில் அறிவு ஏற்பட்டவுடன் அறியாமை பறந்துபோம், வெளிச்சம் வந்தவுடன் இருள் இருந்த இடம் தெரியாது, ஸத்தியத்தின் பெரும் சோதிக்கெதிரே பொய் நிற்கக் கூசும், தேவனை நேருக்கு நேர் கண்டால் அசுரன் குலை நடுக்கம் கண்டு தானே மயங்கி மடிவான். மனிதன் தேவனது பக்கம் சேர்ந்தால் தான் விருத்தியடைந்து தெய்வத் தன்மையைப் பெறுவதோடு நில்லாமல் அதை மானிட உலகிலும் கொணர்ந்து இப்பூமியை சொர்க்கமாக்குகின்றான். அவன் அசுரனது பக்கம் சேர்ந்தால்,

அசுரன் தனது காரியத்திற்காக அவனை முழுதும் உப யோகித்துக்கொண்டு மனித குலத்தையே பூண்டோடு நாசமாக்கி விடுகின்ருன்.

நமது வேத ரிஷிகள் மனிதன் தேவனது பக்கம் சேர்வதற்காகக் கையாண்ட ஓர் மாபெரும் உபாயமே யாகம், வேள்வி என்பது. அசுர சக்திகளை மனிதன் அச காயனுய் ஒழிக்க முடியாது. தேவனின் உதவி அவசியம் என்றுணர்ந்து வேள்வியால் தேவனை இறைஞ்சி, அவன் நம்மில் எழுந்தருளு மாறு பிரார்த்தித்தனர். நாம் நம்மில் எவ்வளவு இடம் தேவனுக்கு அளிக்கின் ருேமோ, அவ்வளவு இடத்தில் அவனது சக்தி நிரம்பு கின்றது. நமது அளிப்பினில் தேவன் களிக்கின் ருன். நாம் எவ்வளவு அவன்பால் நெருங்குகின் ருேமோ அவ்வளவு அவனும் நம்பால் இறங்கி வரு கின்ருன். யாகம் என்பதே பெரியதோர் கொடுக்கல் வாங்கல். நாம் நம்மை ஒளிவு மறைவின்றி முழு தும் அவனுக்கு அர்ப்பணம் செய்தால் அவன் மன முவந்து நம்மை அவனுடையவனுக்கிக் கொண்டு, நம் வாழ்வை அவனே நடத்துகின்ருன். இவ்வாறு யாகத் தில் தேவனை அழைக்க ரிஷிகள் உபயோகித்த வாக்கே வேதம், மந்த்ரம் எனப்படுவது. தேவனை மானிட ரிடையே கொணரவல்லது. மனிதனிடம் தெய்வப் பாதையை வகுத்து அவனை பத்திரமாக அசுர சக்திக ளிடமிருந்து காத்து அழைத்துச் செல்லும் பேராற்றல் பொருந்தியது.

வேள்வித் தத்துவம்

ஆகவே தந்திர சாஸ்திரங்களும் வேத வழியைப் பின்பற்றி மந்திரங்களை உலகிலுள்ள எல்லாவற்றைக் காட்டிலும் மேலானதாயும் ரகசியமாயும் கருதின. மந்திரங்கள் தெய்வத்தை ஆவிர்பவிக்கச் செய்யும் சக்தி பெற்றமையால், அம் மந்தி ரத்தை மானிடனிடமிருந்து அபகரிக்க, தெய்வத்தின் எதிரியான அசுர சக்திகள்

மந்த்ர மகிமை

காத்துக்கொண்டிருக்கும் என்று உணர்ந்துதான் பெரியோர்கள் மந்திரத்தை மிக மிக ரகசியமாய் வைத்துக் கொள்ளவேண்டும், தகுந்த குருவிடமிருந்தே கற்றுணர வேண்டும், வெளிப்படையாகக் கூறக் கூடாது, தகாதவரிடம் சொல்லக் கூடாது, தான் இன்ன தேவதையின் உபாஸகன் என்றுகூட பிறர்க்குத் தெரியக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர். அசுர சக்திகள் சில மனிதரைத் தன் வசப்படுத்திக்கொண்டு அவர்கள் மூலமாக தெய்வ வழியில் நடப்பவருக்குப் பொல்லாங்கு விளைவிக்கலாம். மாயாவிகளான அந்த சக்திகளின் வழிகளில் இது ஒன்று. ஆகவே தீங்கு செய்யும் மனிதரை வெறுப்பது தவறு. அம்மனிதர்மீது ஆரோகணித்திருக்கும் அசுரன், பிசாசு அவ்வாறு அவரைச் செய்விக்கின்றது. நாம் நம்மிடம் தெய்வ சக்தியை வளர்த்துக்கொண்டு விட்டால், அத்தீங்குகள் நம்மை ஒன்றும் செய்யா. அவை அம்மனிதரை விட்டுப் போய் விட்டால் நமது ஜன்ம சத்துருபோல் இருந்த அம்மனிதர் நம் ஆருயிர் நண்பனும் விடுவார்.

ந்யாஸம்

தவிர மனிதன் உடல், உயிர், மனம் இம்மூன்றினாலும் ஆனபடியால் இம்மூன்றிலும் அசுர சக்திகள் ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன. உயிரிலும் மனத்திலும் தெய்வ சக்தி பரவிப் பாய்வது சுலபம். உடல் ஜடமானபடியால் தெய்வ சக்தி பரவுவது கடினம். ஆகவே அசுர சக்திகள் சாதகனது உடலை அதிகமாகத் தாக்குகின்றன. இந்த உடலும் தகுந்த பாதுகாப்புப் பெறவேண்டும் என்பதற்காக மந்திர உபாஸனையில் ஒரு ரகசியச் சடங்கு உள்ளது. ந்யாஸம் என்று இதற்குப் பெயர். ந்யாஸம் என்றால் ஒப்படைப்பது என்று பொருள், அதாவது தெய்வ சக்திக்கு அது காப்பாற்றுமாறு ஒப்படைப்பது. தனது உடலின் அங்கங்களான ஹ்ருதயம், தலை முதலியவற்றை பரமனின் பாதுகாப்புக்கு விடுவது அங்க ந்யாஸம். கைவிரல்கள் பத்தையும் பரமனுக்கு

ஒப்படைப்பது கர ந்யாஸம். கைகளைப் பரமனுக்கு ஒப்படைப்பதன் நோக்கம், கைகளால் செய்யும் காரியங்களனைத்தும் பரமனதாகவேண்டும் என்பதற்காகவே. உள்ளம், உடல், செயல் எல்லாம் மந்த்ரமயமாக ஆகவேண்டும். மந்த்ரமே தேவதையாதலால் மந்த்ரத்தின் அவயவ அக்ஷரங்களால் இந்த ந்யாஸங்களைச் செய்வது வழக்கம். பிறகு இந்த மந்த்ரமயமான ஆகாசத்தில் இடையூறு விளைவிக்கும் சலனம் ஒன்றும் ஏற்படாதபடி திக் பந்தனம், அதாவது திசைகளை அடைத்து விடுவர். இதுதான் மந்த்ர ஜபம் செய்யும்போது ஏற்படுத்திக் கொள்ளும் கவசம், அசுர சக்திகள் தாக்குதலைத் தவிர்க்கும் உறை.

கவசத்தின் அவசியம்

மந்த்ர தீக்ஷை பெற்றவரைத் தவிர, கடவுளின் பால் இழுக்கப்பட்ட சாதாரண ஜனங்களுக்கும், அவர்களது சாதனை வழியில் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டதே இந்த கவச ஸ்தோத்திரங்கள். இவ்வாழ்வுக்கு உடல் மிக முக்கியமாதலால், நம் உடல் கடவுளின் இல்லமாதலால், அதைக் காப்பாற்றவேண்டியது அத்தியாவசியமாகின்றது. உடலுக்கு ஏற்படும் வியாதிகள் அசுர சக்திகளின் வேலையே. ஏனெனில் வியாதி சிறிது சிறிதாக உடலை பலவீனப் படுத்தி, அழித்து, மரணத்தை அருகே கொணர்கின்றது. தெய்வ சக்தியின் குணம் அமரத் தன்மையை அளிப்பது. மானிட உடலின் இயற்கை நியதி வியாதி அல்ல. அது அதன் ஸ்வபாவ நிலை அல்ல. வியாதியற்ற நிலையைத்தான் ஸ்வபாவ நிலை ஸ்வஸ்தம் (स्वस्थ தன்சுய நிலை) என்கிறோம். தவிர உடல் திடமாயிருந்தாலும், இரவில் தூக்கத்தில் நாம் இவ்வுடலை விட்டு எங்கெல்லாமோ செல்கிறோம். அப்போது நம்மைத் தாக்குவது எளிது. தூக்கத்தில் பயந்து கொள்வது, கெட்ட சொப்பனம் கண்டு மனவாட்டமுறுவது, எதையோ கண்டு கிலி அடைவது, எதிர்பாராத தாக்குதலால் சித்த பிரமை

ஏற்படுவது எல்லாம் இந்த அசுர சக்திகளின் தாக்குதலால் ஏற்படும் வினைவே. மேலும் எதிர்பாராமல் திடீரென ஏற்படும் விபத்துகள், மனிதனது உயிரை உடலிலிருந்து பலவந்தமாகப் பிரிக்கும் பிராணாபாயங்கள் (இதை அபம்ருத்யு என்பார் நம்மவர்) எல்லாம் தெய்வ சாம்ராஜ்யத்தை மனிதன் இங்கு கொணராதபடி இந்த அசுர சக்திகள் செய்யும் நாசவேலைகள். கவச ஸ்தோத்திரத்தைப் படிப்பவருக்கு இந்த எல்லாவற்றிலிருந்தும் சிறந்த பாதுகாப்புக் கிடைக்கின்றது.

இனி கவசத்தின் அமைப்பைக் கூறுவோம். எந்த தேவதையைக் குறித்து கவச ஸ்தோத்திரம் இருக்கின்றதோ, அதில் அவனை மையமாக வைத்து, அவனது பல்வேறு சக்திகளை, மூர்த்தி பேதங்களை சுற்றிலும் பாதுகாப்புக்கு நிறுத்துவர். சாதகனது தலை முதல் கால்வரை, உடலில் ஒவ்வொரு பாகமும் இந்த ஒவ்வொரு மூர்த்தியின் பாதுகாப்பைப் பெறுமாறு செய்து, பிறகு எல்லா திசைகளிலும் பாதுகாப்பை ஏற்படுத்துவர். பிறகு, பொதுவாக காலம், தேசம் எப்படி இருப்பினும், எப்போதும் எங்கும் ரக்ஷணம் ஏற்பட வேண்டி சில மூர்த்திகளை நிறுத்துவர். உதாரணமாக, சுப்பிரமணிய கவசத்தில் வேலாயுதன் என்ற மூர்த்தி அசுரர்களை வெருட்டி ஓட்டிப் பாதுகாக்கவும் சரவணபவன் தான் சரவணத்தில் பிறந்தது போல் பக்தன் மனதில் பிறந்து பாதுகாக்கவும் பிரார்த்திக்கப்படலாம். இந்த கவச ஸ்தோத்திரங்களை வாய்விட்டுச் சொன்ன மாத்திரத்திலேயே, அந்தந்த மூர்த்திகள் அவர்களின் குறிப்பிட்ட ஸ்தானங்களில் நின்று சாதகனுக்குப் பாதுகாப்பை அளிப்பர். சாதகனுக்கு எங்கிருந்தோ பலமும் ஊக்கமும் நம்பிக்கையும் ஆனந்தமும் ஏற்படும். இவையெல்லாம் அவரவர் அனுபவித்து அறிய வேண்டியவை. பக்திக்கு ஏற்றபடி பலனுண்டு.

கவச அமைப்பு

பிரயோக சாஸ்திரங்களில் வல்லவர் இந்த கவச ஸ்தோத்திரத்தை பிறர்க்கு உதவியளிக்க உபயோகிப்பர். தான் நன்கு மந்த்ரசித்தி அடைந்தால்தான் பிறர்க்கு உதவியளிக்க முடியும். இவ்வாறு உதவி பெறுவோர், இவ்விஷயங்களைப் பற்றியே ஒன்றும் அறியாது இருப்பினும், உதவி அளிப்பவரின் மகிமையின் காரணமாகக் கவசத்தின் முழுப் பலனையும் அனுபவிப்பர். விபூதியில் மந்திரித்தோ, தங்கம் முதலிய உலோகங்களில் உருவேற்றியோ இந்த கவசங்களைச் செய்வது வழக்கம். ஆனால் இந்த உதவி பெற்றவர், அசுர சக்திகளின் வசப்பட்டு, இந்த தெய்வ ரக்ஷணத்தை தவறான வழிகளுக்கு உபயோகித்துக்கொண்டால், கவசம் ஒன்றும் பயனளிக்காது. விபரீத பலன் ஏற்படாமலிருந்தாலே அவர் அதிர்ஷ்டம்தான்.

பிரயோகம்

" நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க "!

न: शं भवतु निश्शोकमिति न प्रार्थयामहे ।
शंभो राजस्व भो राजन्नित्यस्माकं निवेदना ॥

" துக்கமில்லாமல் சுகம் வேண்டும் எமக்கு என்று நாம் வேண்டவில்லை. ஹே சம்போ, எம்பரசே, எம்மிடம் நீ ஒளிரவேண்டும் என்பதே எம் விண்ணப்பம் ".

—ப்ரஹ்மஸ்ரீ கபாலி சாஸ்திரிகள்.

ஸ்ரீ சிவகவச ஸ்தோத்ரம்

ऋषभ उवाच।

ரிஷபர் கூறினர்

नमस्कृत्वा महादेवं विश्वव्यापिनमीश्वरम्।
वक्ष्ये शिवमयं वर्म सर्वरक्षाकरं नृणाम्॥ १॥

நமஸ்க்ருத்வா மஹாதேவம்
விஶ்வவ்யாபிநமீஶ்வரம் ।
வக்ஷ்யே ஶிவமயம் வர்ம
ஸர்வரக்ஷாகரம் ந்ருணும் ॥ 1 ॥

विश्वव्यापिनं (விஶ்வவ்யாபிநம்) அனைத்திலும் வியாபித்த **महादेवं** (மஹாதேவம்) பெரும் இறைவனும் **ईश्वरं** (ஈஶ்வரம்) ஈசனை **नमस्कृत्वा** (நமஸ்க்ருத்வா) வணங்கி **नृणां** (ந்ருணும்) மாந்தருக்கு **सर्वरक्षाकरं** (ஸர்வரக்ஷாகரம்) எல்லாப் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் **शिवमयं** (ஶிவமயம்) மங்களகரமான **वर्म** (வர்ம) கவசத்தை **वक्ष्ये** (வக்ஷ்யே) கூறுகின்றேன்.

ரிஷப யோகீச்வரர் தான் இந்த சிவகவச ஸ்தோத்திரம் என்னும் மஹாமந்த்ரத்தை அகக்கண் கொண்டு கண்ட ரிஷி. ஆகவே அவர் வாயிலாகக் கவசம் கூறப்படுகின்றது. ஈசனை வணங்கி அவனது அருளால் கவசத்தைச் சொல்லுகின்ருர் ரிஷி. உள்ளும் புறமும்

சுற்றிலும் எங்கும் பரமன் வியாபித்திருப்பதால் ஒவ்வொரு வஸ்துவைச் சுற்றிலும் ஈசனே கவசம்போல் இருக்கின்றான். ஆகவே சிவமயமான கவசம் என்று கூறப்படுகின்றது.

शुचौ देशे समासीनो यथावत् कल्पितासनः ।
जितेन्द्रियो जितप्राणश्चिन्तयेत् शिवमव्ययम् ॥ २ ॥

ஶுசௌ தேஶே ஸமாஸீநோ
யதாவத் கல்பிதாஸந: ।
ஜிதேந்த்ரியோ ஜிதப்ராணஶ்
சிந்தயேத் ஶிவமவ்யயம் ॥ 2 ॥

शुचौ (ஶுசௌ) சுத்தமான देशे (தேஶே) இடத்தில் समासीनः (ஸமாஸீந:) உட்கார்ந்து यथावत् (யதாவத்) முறைப்படி कल्पितासनः (கல்பிதாஸந:) ஆஸனம் ஏற்படுத்திக்கொண்டு जितेन्द्रियः (ஜிதேந்த்ரிய:) புலன்களை வென்று जितप्राणः (ஜிதப்ராண:) ப்ராணனை வென்று अव्ययं (அவ்யயம்) அழிவற்ற शिवं (ஶிவம்) சிவனை चिन्तयेत् (சிந்தயேத்) நினைக்க வேண்டும்.

பரமன் எங்குமுள்ளான் என்பது உண்மையே. ஆனால் அவன் சாந்நித்யத்தை நாம் உணரவேண்டுமாயின், அதற்காக நாம் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் பல உள்ளன. ஓர் அப்பழுக்கற்ற தன்மை, சாந்தம், அமைதி, ஆனந்தம், பெரும் உணர்வு இவையெல்லாம் தெய்வ இயல்பின் குணங்கள். இவைகளுக்குப் புறம்பானவற்றை விலக்கி இவைகளுக்கு அநு

குணமாக நம் செயல், பேச்சு, சிந்தை இம்மூன்றையும் திருத்தி அமைப்பது முதல் நியமமாகும்.

உடல், ப்ராணன், மனம் மூன்றும் ஒருமித்து தியானத்தில் ஈடுபடவேண்டும். அவ்வாறு ஈடுபடாவிடில் தியானம் உண்மை தியானமாகாது. இது எப்படி முடியும் என்பதை இந்த ச்லோகம் விளக்குகின்றது.

நம் உடல், ப்ராணன், மனம் இம்மூன்றிற்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால், ஒன்றின் நிலை மற்றொன்றை பாதிக்கின்றது. மனம் அமைதி அடைய வேண்டுமானுல் முதலில் உடலமைதி வேண்டும். நாம் அமரும் இடம் சுத்தமாக இருக்கவேண்டும்; சுகாதார முறைப்படி மாத்திரம் அல்ல. அசுத்த எண்ணம், நடத்தை உடையவர்கள் இருக்குமிடம் அசுத்தமானதே. ஆகவே கூடியவரை நம் தியானத்திற்கு நாமே முட்டுக் கட்டை போடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே சூழ்நிலையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாமல் தியானம் செய்வது வயிற்றில் பெருங்கல்லைக் கட்டிக்கொண்டு தண்ணீரில் நீந்தச் செல்வது போலாகும்.

தவிர, ஓரிடத்தில் ஒரு நிமிஷம் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பது பலருக்கு மிக சிரமமான காரியம். சதா அங்கங்கள் ஏதோ சேஷ்டை செய்தவாறு இருக்கும். இந்த சேஷ்டைகளால் விலைமதிப்பற்ற நம் ப்ராண சக்தி உடலை விட்டு வெளியே போய்விடுகின்றது. இவ்வாறு விரயமாவதைத் தடுத்து சலனமற்று அமைதியாய் உடல் இருக்க ஆஸனம் உதவுகின்றது. ஆஸனம் என்பது முதுகெலும்பு வளையாமல் சுகமாய் ஸ்திரமாய் உட்காரும் நிலை. அவரவர்களுக்கு எந்த ஆஸனம் சுகமாக இருக்கின்றதோ அதில் உட்கார்ந்து கொள்ளலாம். இவைகளைப்பற்றி அறிய விரும்புவோர் ஹடயோக ப்ரதீபிகை முதலிய கிரந்தங்களைக் காண்க.

ஆஸனம் என்பது எதன்மீது உட்காருகின்றேமோ அதையும் குறிக்கும். தியானத்தின் நோக்கத்திற் கேற்ப ஆஸனங்களின் உபயோகத்தை தந்த்ர சாஸ் திரங்கள் கூறுகின்றன. புலித்தோல் ஆஸனம் தியா னத்தில் ஏகாக்ர சித்தத்தை வளர்க்கும் என்பர். புலி எப்படி தன் இறையை குறிதப்பாமல் ஒரேயடியாக அடித்து விழ்த்துகின்றதோ அவ்வாறே தியானம் செய் பவனும் தான் தியானிக்கும் பொருளின் குறியைத் தப்பமாட்டான் என்பர். மான்தோல் ஆஸனத்தில் தியானம் செய்தால் சாந்தி கிட்டும் என்றுரைப்பர்.

இவ்வாறு ஆஸனத்தில் உட்கார்ந்து உடலமைதி பெற்றவுடன் புலன்களின் அமைதியையும் பெறவேண் டும். உடல் அமைதியாக இருந்தாலும், சதா வேலை செய்து பழகிப்போன இந்திரியங்கள் தங்கள் விருத்தி களை நிறுத்தா. புலன்களையும் அமைதியாக்கி அவை களை தியானத்தில் லயிக்கச் செய்யவேண்டும். இதற்கு சுலபமான வழி கண்களை மூடிக்கொண்டு விடுவது. கண்களை மூடியவுடன் வெளி உலகம் மறைந்துவிடுகின் றது; புலன்களின் வெளிவிருத்தியும் குறைந்து விடு கின்றது.

இவ்வாறு जितेन्द्रिय: (ஜிதேந்த்ரிய:) இந்திரியங்களை வென்ற பிறகு ப்ராணனை வெல்லவேண்டும். அதாவது தாறுமாருக விடும் மூச்சை ஒழுங்குபடுத்த வேண்டும். जितप्राण: (ஜிதப்ராண:) என்பதால் ப்ராணன் என்ற மூச்சுக் காற்றுடன் ப்ராணமயகோசமும் குறிக்கப்படு கின்றது. கோபம், தாபம் முதலிய உணர்ச்சிகளால் ஆனது இந்த ப்ராணமயகோசம். உணர்ச்சிக்கும் சுவா சத்திற்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டு. கோபம், காமம் முதலிய உணர்ச்சிகளுக்கு வசப்படும்போது, சுவாசம் அதிக வேகமாய்ப் போவது அனைவருமறிந் ததே. ஆகவே உணர்ச்சிகளை வசப்படுத்தும் சுலப வழி சுவாசத்தை வசப்படுத்துவது. இதுவே ப்ராணுயாமத்

தின் சித்தாந்தம். உடல் ஆஸனத்தால் அமைதி பெற்று புலன்களும் அமைதியுற்ருலும், கோபம் முதலிய உணர்ச்சிகளின் வசப்பட்டு மனம் சிரமப்படலாம். அதையும் நீக்க ப்ராணனை வெல்லவேண்டும் जितप्राण: (ஜிதப்ராண:) அதாவது சுவாசத்தையும் அமைதியாக்க வேண்டும்.

பிறகு चिन्तयेत् (சிந்தயேத்) சிந்திக்கவேண்டும்; மனதால் ஒன்றையும் இடைவிடாது சிந்திக்க முடியாது. குரங்குபோல் ஓர் சிந்தனையிலிருந்து இன்னொரு சிந்தனைக்குப் பாய்வதே அதன் இயல்பு. நம்மை அறியாமலேயே, இயந்திரம்போல் இயங்கி, எங்கோ ஓர் எண்ணத்தில் ஆரம்பித்து முற்றிலும் சம்பந்தமில்லாத இன்னொரு எண்ணத்தில் போய் முடியும் குணம் வாய்ந்தது. தவிர ஓர் எண்ணம் எழுந்தால் அதற்கு நேர்மாருன இன்னொரு எண்ணம் எழுந்து அதை அழித்துவிடும். இவ்வாறு இல்லாமல் अव्ययं (அவ்யயம்) அழிவற்ற, நாசமற்ற பரம்பொருளை இடைவிடாது திருப்பத்திருப்ப நினைக்கவேண்டும்.

இவ்வாறு நினைப்பது, - சுத்தமான இடம், ஆஸனம், புலனடக்கம், சுவாச நேர்மை இவையனைத்தும் கூடினல்தான் கைகூடும். இவை பழகப் பழக நன்கு வரும். ஈசனின் அனுக்கிரகமும் கைகொடுத்து உதவும். எங்கே, எப்படி நினைக்கவேண்டும் என்று அடுத்த ச்லோகம் கூறுகின்றது.

हृत्पुण्डरीकान्तरसंनिविष्टं
स्वतेजसा व्याप्तनभोऽवकाशम् ।
अतीन्द्रियं सूक्ष्ममनन्तमाद्यं
ध्यायेत् परानन्दमयं महेशम् ॥ ३ ॥

ஹ்ருத்புண்டரீகாந்தரஸந்நிவிஷ்டம்
ஸ்வதேஜஸா வ்யாப்தநபோவகாஶம் ।
அதீந்த்ரியம் ஸூக்ஷ்மமநந்தமாத்யம்
த்யாயேத் பராநந்தமயம் மஹேஶம் ॥3॥

अतीन्द्रियं (அதீந்த்ரியம்) புலன்களுக்கு அப்பாற்பட்ட सूक्ष्मं (ஸூக்ஷ்மம்) நுண்மையை अनन्तं (அநந்தம்) முடிவற்ற आद्यं (ஆத்யம்) முதலான महेशं (மஹேஶம்) மகேசனை हृत्पुण्डरीकान्तरसंनिविष्टं (ஹ்ருத்புண்டரீகாந்தரஸந்நிவிஷ்டம்) ஹ்ருதயத்தாமரையினுள் அமர்ந்திருப்பவனாக स्वतेजसा (ஸ்வதேஜஸா) தன் ஒளியால் व्याप्तनभोऽवकाशं (வ்யாப்தநபோவகாஶம்) பரவி நிறைத்த இதயாகாச வெளியை உடையவனாக परानन्दमयं (பராநந்தமயம்) பெரும் இன்பமயமாக ध्यायेत् (த்யாயேத்) தியானிக்க வேண்டும்.

அனைத்திற்கும் இறைவன் நம் புலன்களின் ஆட்சிக்கு அப்பாற்பட்டவன், முடிவற்றவன், அனைத்திற்கும் முதல்வன். நம்மால் கண்டுகொள்ளாவண்ணம் அவ்வளவு நுண்ணியவன். ஆகாசமே அவனது சரீரம் என்பர். ஆயினும் இந்த வெளி ஆகாசம் எவ்வளவு

பரந்ததோ அவ்வாறு ஒவ்வொரு பிராணியின் இதயத்தினுள்ளும் ஓர் பரந்த ஆகாசம் உளது. இந்த வெளியில் ஒளியைக் கண்டார்

यावान् वा अयमाकाशः तावान् एषोऽन्तर्हृदय आकाशः

யாவான் வா அயமாகாச: தாவாந் ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாச:

என்ற ச்ருதியின் தத்துவத்தை அறிவர். அண்டத்தில் ஆகாசத்தை உடலாக உடைய பரமன் பிண்டத்தில் ஹ்ருதயத்தே தஹர ஆகாசத்தை உடலாகக் கொண்டுள்ளான். ஆகவே ஒவ்வொரு ஜீவனும் தன்னை அறிந்தாலே, ஜகத்தையும் ஈசனையும் அறிந்தவன் ஆவான். தன் ஹ்ருதயத்தில் ஈசனை தியானிக்கவேண்டும்.

ஆகாசம் என்பது பஞ்ச பூதங்களில் ஒன்று. இந்த ஆகாசமே ஒளிக்கதிர்களை நம் கண்களிற்குப் புலனுக்கு கின்றது. ஆகாசம் (வெளி) என்பது ஒன்று இல்லாவிட்டால் ப்ரகாசம் (வெளிச்சம்) என்பதும் இல்லை. ஆகாசம், ப்ரகாசம் இவ்விரண்டும் काश् (காஶ்) என்ற ஒரே தாதுவிலிருந்து தோன்றும் உருவங்கள். தமிழ் மொழியிலும் வெளி, வெளிச்சம் என்ற பெயர்களிலிருந்து உண்மையை உணரலாம். ஆகவே **आकाशशरीरं ब्रह्म** (ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம) என்றால் எங்கும் வியாபித்த ஒளிப்பிழம்பு உடல், தேஜோமயமான சரீரம் பரமனது என்று பொருள். பெரும் தேஜஸ் மட்டுமல்ல **यदेष आकाश आनन्दः** (யதேஷ ஆகாஶ ஆநந்த:) என்று உபநிஷத் ஆகாசம் என்பது ஆனந்தத்தின் மற்றொரு பெயர் என்கிறது; ஆகவே ஆனந்தமயமான உடல், திவ்விய ஒளியும் ஆனந்தமுமே இறைவனின் உடல்.

நமது போல் எலும்பு மாம்சங்களால் ஆனதல்ல. ஆகவே ஈசனை ஹ்ருதயத்தில் தியானிக்கவேண்டும் என்றால் ஒரே ஜ்யோதிர்மயமாக स्वतेजसा व्याप्तनभोऽवकाशम् (ஸ்வதேஜஸா வ்யாப்தநபோவகாஶம்) பரம ஆனந்தமயமாக परानन्दमयं (பராநந்தமயம்) அவனுருவை எண்ண வேண்டும்.

ध्यानावधूताखिलकर्मबन्ध
श्चिरं चिदानन्दनिमग्नचेताः ।
षडक्षरन्याससमाहितात्मा
शैवेन कुर्यात् कवचेन रक्षाम् ॥ ४ ॥

த்யாநாவதூதாகிலகர்மபந்தஶ்
சிரம் சிதாநந்த நிமக்னசேதா: ।
ஷடக்ஷரந்யாஸ ஸமாஹிதாத்மா
ஶைவேன குர்யாத் கவசேன ரக்ஷாம் ॥ 4 ॥

ध्यानावधूताखिलकर्मबन्धः (த்யாநாவதூதாகிலகர்மபந்த:) தியானத்தால் தகர்த்தெறிந்த எல்லாக் கருமத்தளைகளை உடையவனாய் चिरं (சிரம்) வெகு நேரம் चिदानन्दनिमग्नचेताः (சிதாநந்தநிமக்னசேதா:) உணர்வு ஆனந்தம் இவற்றில் அமிழ்ந்த மனத்தினனாய் षडक्षर-न्याससमाहितात्मा (ஷடக்ஷரந்யாஸ ஸமாஹிதாத்மா) ஆறு அக்ஷர ந்யாஸத்தால் அமைதியான உள்ளத்தினனாய்

शैवेन (ஶைவேந) சிவமயமான कवचेन (கவசேந) கவசத்தால் रक्षां (ரக்ஷாம்) பாதுகாப்பை कुर्यात् (குர்யாத்) செய்யவேண்டும்.

வெளிக்கருமங்கள் ஸதா மனிதனைப் பிணைக்கின்றன. இப்பிணைப்பிலிருந்து விடுபட அவன் தன்னுள்ளே லயிக்க வேண்டும். அப்போது படிப்படியாக தான் யார் என்ற அறிவு ஏற்பட்டு தனக்கும் இந்த உடல், மனம் செய்யும் கருமங்களுக்கும் சம்பந்தமில்லை என்று தெளிவாகும். மனம் எப்போதும் அகண்ட உணர்வு அகண்ட ஆனந்தம் இவற்றிலேயே மூழ்கியிருக்கும்.

பிரணவத்துடன் சேர்ந்த பஞ்சாக்ஷரத்தைத் தான் சுலோகத்தில் ஷடக்ஷரம் என்றனர். இந்த பிரணவம் வைதிகமான ஓங்காரமாகவோ, தாந்த்ரிகமான ஹ்ரீங்காரமாகவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ, அவரவர் உபதேசம் பெற்றபடி இருக்கும் என்று தெளிக. இந்த மந்திரத்தால் ந்யாஸம் செய்த உடனேயே சாதகனது சரீரம் மந்திரமயமாகி விடுகின்றது. உள்ளத்தில் பெரும் அமைதி புகுகின்றது.

இப்போது சிவ கவசத்தால் தன்னைப் போர்த்திக் கொள்ள வேண்டும்.

मां पातु देवोऽखिलदेवतात्मा
संसारकूपे पतितं गभीरे।
तन्नाम दिव्यं परमन्त्रमूलं
धुनोतु मे सर्वमघं हृदिस्थम् ॥ ५ ॥

மாம் பாது தேவோகில தேவதாத்மா
ஸம்ஸாரகூபே பதிதம் கபீரே ।
தந்நாம திவ்யம் பரமந்த்ரமூலம்
துநோது மே ஸர்வமகம் ஹ்ருதிஸ்தம் ॥5॥

अखिलदेवतात्मा (அகிலதேவதாத்மா) எல்லா தேவதைகளுக்கும் ஆத்மாவான देवः (தேவ:) தேவன் गभीरे (கபீரே) ஆழமான संसारकूपे (ஸம்ஸாரகூபே) சம்சாரக் கிணற்றில் पतितं (பதிதம்) விழுந்த मां (மாம்) என்னை पातु (பாது) காக்க; मे (மே) எனது हृदिस्थं (ஹ்ருதிஸ்தம்) ஹ்ருதயத்தில் நிலைத்த परमन्त्रमूलं (பரமந்த்ரமூலம்) பெரும் மந்த்ரத்தின் வேரான दिव्यं (திவ்யம்) ஒளி மிகுந்த तन्नाम (தந்நாம) அவன் பெயர் सर्वं (ஸர்வம்) எல்லா अघं (அகம்) பாபத்தையும் धुनोतु (துநோது) போக்குக.

இந்த சிவகவச ஸ்தோத்திரத்தில் துதிக்கப்படும் கடவுள் தேவாதிதேவன், மகாதேவன், மகேச்வரன், சகல தேவதைகளுக்கும் ஆத்மாவாக இருக்கும் பெரும் தேவன். ஆகவே எந்த தேவனைத் தொழுதாலும் அத் தேவனின் ஆத்மாவான இம் மகாதேவனே தொழப் படுகின்றான். நாம் எப்படி நமது ஆத்ம அறிவைப்

பெறவேண்டுமோ அவ்வாறே எல்லா தேவதைகளும் தங்கள் ஆத்மாவான இத்தேவனை அறியவேண்டும். இதுவே அவர்கள் செய்யவேண்டிய தவம், சாதனை, யோகம்.

स आत्मा अङ्गान्यन्या देवताः (ஸ ஆத்மா அங்காந்யந்யா தேவதா:) 'அவன் ஆத்மா மற்ற தேவதைகள் அவனது அங்கங்கள்' என்று ச்ருதி சொல்லும்.

இதை 'எல்லா தேவதைகளும் ஒன்றுதான், எல்லாம் அந்த ஆதிதேவனே' என்று மட்டும் புரிந்து கொள்ளுதல் போதாது.

இறைவன் இவ்வுலகைப் படைத்தபோது இதன் வேலைக்காகத் தன்னைப் பல்வேறாக ஆக்கிக்கொண்டான். அந்தப் பல்வேறு கூறுகளுக்கும் ஓர் தனிப்பட்ட சக்தி, தனிப்பட்ட பெயர், தனிப்பட்ட உருவம் உண்டு. இவை எல்லாம் சரீரத்தின் பல அங்கங்கள் போல். காது என்றால் அதற்குத் தனிப்பட்ட உருவம், கேட்கும் சக்தி; கண் என்றால் பார்க்கும் சக்தி என்று இருப்பது போலாம். ஆயினும் வெளி உலகைக் காது மூலமோ கண் மூலமோ நாம் கிரகிப்பதுபோல் இந்த ஏதாவதொரு தேவன்மூலம் பரம்பொருளை அடையலாம். அந்தந்த தேவனை உபாசிக்கும்போழுது அவனுக்கு என்று இருக்கும் உருவை மனதில் இருத்தி அவன் பெயரை உச்சரித்து வழிபட வேண்டும்; இல்லாவிடில் சாதனை பயனளிக்காது. இதுவே தந்த்ர சாஸ்திரத்தின் ரகசியம். அவ்விதமே, இந்த எல்லா தேவதைகளின் ஆத்மாவான மகாதேவனுக்கும் ஓர் தனிப்பட்ட பெயரும் உருவமும் இருக்கின்றது. அந்தப் பெயர் உலகிலுள்ள எல்லாப் பெயர்களின் ஆணிவேர் போன்றது. அந்த மந்த்ரம் சகல தேவதைகளின் மந்த்ரங்களின் மூலம் 'परमन्त्रमूलम्' (பரமந்த்ரமூலம்). பரமசிவனது பஞ்சாக்ஷரமான நமச்

சிவாய வெனும் நாமம்தான் அது. அதுவே எல்லா மந்திரங்களின் அஸ்திவாரம் என்றும் அதை குருவிடம் கற்று அறியாது மற்ற மந்திரங்களை அறிவது பயனளிக்காது என்றும் சைவ சமயத்தின் மரபு.

நாம ரூபமயமான இவ்வுலகில் ஒருவனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் அவன் வருவதுபோல், ஹ்ருதயத்தின் ஆழத்திலிருந்து தேவனின் நாமத்தை உச்சரித்த மாத்திரத்தில் அவனது சாந்நித்யம் சித்திக்கின்றது. இவ்வாறு தெரிந்து உச்சரிக்கப்படும் நாமம் (பெயர்) தான் வேதரிஷிகளின் வாக்கு, தந்த்ர சாஸ்திர யோகிகளின் மந்த்ரம், பெரும் சக்தி வாய்ந்தது, படைக்கும் ஆற்றல் பெற்றது, தேவனை மானிடரிடையே கொணர வல்லது. இந்த மாபெரும் பெயர் எல்லாப் பாபத்தையும் தொலைத்து இதயத்தை ஈசனின் இல்லமாக்குகின்றது.

सर्वत्र मां रक्षतु विश्वमूर्ति-

ज्योतिर्मयानन्दघन श्चिदात्मा ।

अणोरणीयानुरुशक्तिरेकः

स ईश्वरः पातु भयादशेषात् ॥ ६ ॥

ஸர்வத்ர மாம் ரக்ஷது விஸ்வமூர்த்திர்

ஜ்யோதிர்மயாநந்தகநஸ்சிதாத்மா ।

அணோரணீயாநுருஸக்திரேக:

ஸ ஈஸ்வர: பாது பயாதஸேஷாத் ॥ 6

विश्वमूर्तिः (விஸ்வமூர்த்தி:) எங்கும் உருவமுடையோன் मां (மாம்) என்னை सर्वत्र (ஸர்வத்ர) எங்கும் [illegible] (ரக்ஷது) காப்பாற்றுக; ज्योतिर्मयानन्दघनः (ஜ்யோதிர்மயா நந்தகன:) ஒளிப்பிழம்பான ஆனந்தம் உறைந்த, चिदात्मा (சிதாத்மா)

உணர்வை ஆத்மாவாகக்கொண்ட अणो: (அணோ:) அணுவிலும் अणीयान् (அணீயான்) அணுவாய் उरुशक्ति: (உருமக்தி:) மாபெரும் ஆற்றலான एक: (ஏக:) ஒருவனாய் தனித்து நிற்கும் स: (ஸ:) அந்த ईश्वर: (ஈச்வர:) இறைவன் अशेषात् (அசேஷாத்) எல்லாவிதமான भयात् (பயாத்) பயத்திலிருந்தும் पातु (பாது) காக்க.

आकाशशरीरं ब्रह्म (ஆகாமமரீரம் ப்ரஹ்ம) ஆகாசமே பரமனின் உடல்; அதுவும் தேஜோமயமான ஆனந்தம் அப்படியே உறைந்து கெட்டியாகி பரமனது சரீரமாய் விளங்குகின்றது. ज्योतिर्मयानन्दघन: (ஜ்யோதிர்மயாநந்தகந:) என்று சுலோகத்தில் குறித்தனர். அகண்ட சைதன்யமே அவனுடைய ஆத்மா चिदात्मा (சிதாத்மா). நாம் அனைவருக்கும் ஓர் உடலும், இவ்வுடல் வேலைகளை இயக்கி வைக்கும் ஓர் உணர்வும், ஒன்றிலும் கலவாது சாட்சியாய் நிற்கும் ஓர் பொருளும் உள்ளே இருப்பது போல்,பரமனுக்கும் உண்டு. ஆனந்தம் அவனது உடல், சித் என்பது அவனது கருமங்களை ஆற்றும் உணர்வு, ஸத் என்பது அவனது ஒன்றிலும் பற்றற்ற பகுதி. இதைத் தான் இறைவன் ஸச்சிதானந்தரூபி என்று குறிப்பர்.

இவ்வாறு எங்கும் பரந்து வியாபித்து எங்கும் தன்னுருவாய் விளங்கும் பரமன் அதிசூக்ஷ்மமாயும் அதிஸ்தூலமாயும், அணுவிலும் அணுவாய் பெரிதிலும் பெரிதாய் अणोरणीयान् महतो महीयान् (அணோரணீயாங் மஹதோ மஹீயாங்) எவ்வஸ்துவிலும் இருக்கும் வாஸ்தவப் பொருளாய், தனிப்பெருந் தெய்வமாய் இருப்பதை உணர்ந்தவனுக்கு பயமேது? பயம் என்பது எல்லாம் ஒன்று

என்று அறியாமல் இரண்டாகப் பார்ப்பவனுக்கு ஏற்படும் ஓர் உணர்ச்சி. தான் வேறு பிறர் வேறு என்ற எண்ணமும் தன்னைப் பிறரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவும் பிறர் இருப்பதே தனது ஆபத்திற்குத்தான் என்ற புத்தியும் பயத்திற்குக் காரணம். இவ்வகில உலகிலுள்ள அனைத்தும் பரமனின் ஒரே உருவம் என்று தெளிந்தால், பரமனைத் தவிர உலகில் ஒன்றுமில்லை என்று உணர்ந்தால் பீதி ஏது? தன்னைத்தவிர வேறு ஒரு பொருளிடமிருந்தல்லவா பயப்படவேண்டும்? द्वितीयाद्वै भयं भवति (த்விதீயாத்வை பயம் பவதி) என்று ப்ருகதாரண்யகம் கூறும். அவ்வாறு வேறுபொருளே இல்லாதபோது பயம் எப்படி உதிக்கும்? இதைத்தான் தைத்திரிய உபநிஷத்தும்

यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते ।
अथ तस्य भयं भवति ॥

யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே ।
அத தஸ்ய பயம் பவதி ॥

என்று விளக்குகின்றது.

———

यो भूस्वरूपेण बिभर्ति विश्वं
पायात् स भूमेर्गिरिशोऽष्टमूर्तिः ।
योऽपां स्वरूपेण नृणां करोति
सञ्जीवनं सोऽवतु मां जलेभ्यः ॥ ७ ॥

யோ பூஸ்வரூபேண பிபர்த்தி விஶ்வம்
பாயாத் ஸ பூமேர் கிரிஶோஷ்டமூர்த்தி: ।
யோபாம் ஸ்வரூபேண் ந்ருணாம் கரோதி
ஸஞ்ஜீவநம் ஸோவது மாம் ஜலேப்ய:
॥ 7 ॥

य: (ய: எந்த अष्टमूर्ति: (அஷ்டமூர்த்தி:) எட்டு உருக்கொண்டோன் भूस्वरूपेण (பூஸ்வரூபேண) பூமியின் உருவமாகி विश्वं (விஶ்வம்) அனைத்தையும் बिभर्ति (பிபர்த்தி) தாங்குகின்றானோ स: (ஸ:) அந்த गिरिश: (கிரிஶ:) மலையில் உறைபவன் भूमे: (பூமே:) பூமியிடமிருந்து पायात् (பாயாத்) காக்க; य: (ய:) எவன் अपां स्वरूपेण (அபாம் ஸ்வரூபேண) ஜலத்தின் உருவாகி नृणां (ந்ருணாம்) மாந்தர்களுக்கு सञ्जीवनं करोति (ஸஞ்ஜீவனம் கரோதி) உயிரளிக்கின்றானோ स: (ஸ;) அவன் मां (மாம்) என்னை जलेभ्य: (ஜலேப்ய:) ஜலத்திடமிருந்து अवतु (அவது) ரக்ஷிக்க

இவ்வுலகிலுள்ள அனைத்தும் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்று ஐந்து பூதங்களால் ஆனது. இந்த மகா பூதங்கள் ஐந்தும், சூரியன், சந்தி

ரன், யாகம் செய்யும் யஜமானன் ஆக மூன்றும், மகா தேவனின் எட்டு மூர்த்திகள் என்பர். பஞ்ச பூதங் களும், சூரியனும் சந்திரனும் உலகிற்கு இன்றியமை யாதவை. ஆகவே அவை பரமனின் உருவங்கள் என் பது சரி. யாகம் செய்யும் யஜமானன் என்ற எட்டா வது உருவம் பற்றி சிறிது விளக்க வேண்டும்.

சிருஷ்டி என்பது கடவுள் நடத்தும் பெரும் வேள்வி. அந்த வேள்வியில் இறைவன் தன்னையே தியா கம் செய்துகொள்ளுகின்றான். ஒருவனாய் இருந்த தான், பல்வேறு ஜீவகோடிகளாக சிதைக்கப்படுவதை ஏற்றுக் கொண்டு, இந்த சிருஷ்டிக்காகத் தன்னையே பலியிட்டுக் கொள்கின்றான். தான் சிருஷ்டித்த ஜீவராசிகளுக்குத் தன்னை முழுதும் அர்ப்பணம் செய்து, பூமி, ஜலம், நெருப்பு, காற்று முதலிய உருக்கொண்டு அவைகளின் உயிர்களை தரிக்கின்றான். "தேவர்கள் பெரும் வேள்வி நடத்தினர்; அதில் வசந்த ருதுவே நெய், வெய்யில் காலமே விறகு, சருத் ருதுவே ஹவிஸ்,

देवा यज्ञमतन्वत । वसन्तोऽस्यासीदाज्यं

ग्रीष्म इध्मः शरत् हविः ।

தேவா யக்ஞ மதன்வத । வஸந்தோஸ்யா

ஸீதாஜ்யம் । க்ரீஷ்ம இத்ம: ஶரத் ஹவி: ।

பரம புருஷனையே யாகப் பசுவாகக் கட்டினர்"

अबध्नन् पुरुषं पशुम्

அபத்நந் புருஷம் பசும்

என்று புருஷஸூக்தம் இம்மாபெரும் வேள்வியை வர் ணிக்கின்றது. இவ்வாறு பரமன் தன்னைத் தியாகம் செய்தே படைக்கின்றான். படைப்பிலுள்ள சகல ஜீவர் களும் பரமனை அடையும் வழி இவ்வுலகிலுள்ள

அனைத்தையும் தங்களையும் பரமனுக்காக தியாகம் செய்வதே. இவ்வாறு பரஸ்பர வேள்வியில் அனைத்தும் நிற்கின்றன.

' यज्ञेन यज्ञमयजन्त ' ' यज्ञो यज्ञेन कल्पताम् '

' யக்ஞேந யக்ஞமயஜந்த ' ' யக்ஞோ யக்ஞேந கல்பதாம் '

என்று மறை சாற்றும். இந்த வேள்வியின் யஜமானன்-அம்சமான தன்னை, பூர்ணமான தன் நிஜ உருவிற்கு அர்ப்பிக்கும் ஜீவன்—இறைவனின் உருவே. பஞ்ச பூதங்கள், சூரியன் சந்திரன் ஆகிய ஏழு தத்துவங்களால் ஆன படைப்பும் இப்படைப்பை பெரும் வேள்வியாகக் கருதி நடத்தும் யஜமானனும் மகாதேவனின் அஷ்ட மூர்த்திகள்.

பூமியின் மூலமாக நமக்கு பூகம்பம், எரிமலை வெடிப்பு முதலிய பெரும் விபத்துகள் உண்டாகலாம். சிவபிரான் பூமியின் தத்துவமாகி நிற்பதால் அவன் நம்மைக் காப்பான். அவ்வாறே ஜலத்தின் தத்துவமாகி நிற்பதால் ஜலத்தில் ஏற்படும் ஆபத்துகளிலிருந்தும் நம்மை ரக்ஷிப்பான்.

உட்பொருளை நோக்கின், பூமி, ஜலம் என்பவை அன்னமய ப்ராணமய கோசங்களைக் குறிக்கும். யோக சாதனையில் இந்த கோசங்களிலுள்ள குறைபாடுகளை நீக்கி ஆபத்துகளைத் தவிர்த்து ரக்ஷிப்பான் ஈசன்; ஏனெனில் அவனே ப்ருதிவீ அப்பு இவைகளின் தந்மாத்திரைகளாக இருப்பவன்.

कल्पावसाने भुवनानि दग्ध्वा
सर्वाणि यो नृत्यति भूरिलीलः ।
स कालरुद्रोऽवतु मां दवाग्ने-
र्वात्यादिभीतेरखिलाच्च तापात् ॥ ८ ॥

கல்பாவஸானே புவநானி தக்த்வா
ஸர்வாணி யோ ந்ருத்யதி பூரிலீல: |
ஸ காலருத்ரோவது மாம் தவாக்னேர்
வாத்யாதிபீதே ரகிலாச்ச தாபாத் || 8 ||

यः (ய:) எவன், भूरिलीलः (பூரிலீல:) மிகுந்த விளையாட்டுடன், कल्पावसाने (கல்பாவஸானே) கல்பத்தின் முடிவில், सर्वाणि (ஸர்வாணி, எல்லா भुवनानि (புவநானி) உலகங்களையும் दग्ध्वा (தக்த்வா) எரித்துவிட்டு नृत्यति (ந்ருத்யதி) நடனமாடுகின்றனோ स कालरुद्रः (ஸ காலருத்ர:) அந்த கால ருத்ரன் दवाग्नेः (தவாக்னே:) காட்டுத்தீயிலிருந்தும் वात्यादि भीतेः (வாத்யாதி பீதே:) புயல் காற்று முதலிய பயத்திலிருந்தும் अखिलात् (அகிலாத்) எல்லா तापात् च (தாபாத் ச) தாபத்திலிருந்தும் मां (மாம்) என்னை अवतु (அவது) காக்கவேண்டும்

உலகங்களை சிருஷ்டித்துவிட்டு, ஓர் நிச்சயித்த நாளில் அவைகளைத் தானே ஊழிக்கனலாகிப் பொசுக்கி அனைத்தையும் சுடுகாடாக்கித் தாண்டவம் புரிகின்றான் ஈசன். படைத்ததை அழிப்பானேன் என்றால் படைத்ததைப்போல் அழிப்பதும் அவன் லீலை भूरिलीलः (பூரிலீல:), कल्पः (கல்ப:) என்றால் ஸங்கல்பம், மனதால் செய்த

ஓர் நிச்சயம், ஓர் காலவரை, ஈசனின் ஸங்கல்பம். இதை இவ்வளவு யுகங்கள் என்று தீர்மானமாகக் கணக்கிட்டுச் சொல்வாருமுண்டு.

அவ்வாறு அழிக்கும் காலருத்ரன், நெருப்பு, காற்று முதலிய மற்ற பூதங்களிலிருந்து நம்மைக் காக்க வேண்டும். ஏனெனில் அழித்தல் ஆக்கத்தின் அஸ்திவாரம். சம்ஹாரமே ஸ்ருஷ்டிக்கு அடிகோலுவது.

प्रदीप्तविद्युत्कनकावभासो
विद्यावराभीतिकुठारपाणिः ।
चतुर्मुखस्तत्पुरुषस्त्रिनेत्रः
प्राच्यां स्थितो रक्षतु मामजस्रम् ॥ ९ ॥

ப்ரதீப்தவித்யுத் கனகாவபாஸோ
வித்யாவராபீதி குடாரபாணி: ।
சதுர்முகஸ் தத்புருஷஸ் த்ரிநேத்ர:
ப்ராச்யாம் ஸ்திதோ ரக்ஷது மாமஜஸ்ரம்
॥ 9 ॥

प्रदीप्तविद्युत्कनकावभासः (ப்ரதீப்தவித்யுத்கனகாவபாஸ:) மின்னும் மின்னல், பொன், இவைகளின் ஒளியுடையவனும், विद्यावराभीतिकुठारपाणिः (வித்யாவராபீதிகுடாரபாணி:) ஞானம், வரம், அபயம், கோடாலி இவைகளைக் கையில் ஏந்தியவனும். चतुर्मुखः (சதுர்முக:)

நான்கு முகமுடையவனும், त्रिनेत्रः (த்ரிணேத்ர;) மூன்று கண்களை உடையவனுமான तत्पुरुषः (தத்புருஷ:) தத்புருஷன் प्राच्यां (ப்ராச்யாம்) கிழக்கில் स्थितः (ஸ்தித:) நின்று मां (மாம்) என்னை. अजस्र (அஜஸ்ரம்) எப்போதும் रक्षतु (ரக்ஷது) காக்க.

பரமசிவனின் ஐந்து மூர்த்திகள் ஐந்து சுலோகங்களில் கூறப்படுகின்றன.

மந்த்ரமே தேவதையின் சரீரம் என்பர். நாதமே சிருஷ்டிக்குக் காரணமாதலால் ஓர் மந்த்ரத்தைக் கூறியவுடன் அந்த மந்த்ரத்தின் அதிதேவதையின் ரூபம் சிருஷ்டிக்கப்படுகின்றது. விசேஷமாக, ஸ்ரீவித்யையைப் பற்றிக் கூறுங்கால். மந்த்ரத்தின் ஒவ்வொரு எழுத்தும் தேவியின் ஒவ்வொரு அங்கம் என்று உரைப்பர். मूलमन्त्रात्मिका मूलकूटत्रयकलेबरा (மூலமந்த்ராத்மிகா மூலகூடத்ரயகலேபரா) என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமும் भजन्ते वर्णास्ते तव जननि नामावयवताम् (பஜந்தே வர்ணஸ்தே தவ ஜனனி நாமாவயவதாம்) என்று ஸௌந்தர்யலஹரியும் கூறுவதைக் காண்க.

அவ்வாறே பஞ்சாக்ஷரம் என்ற ஐந்து எழுத்து மகா மந்த்ரத்தின் அதிதேவனான பரமசிவனுக்கு முகம் ஐந்து, சரவணபவனான முருகக் கடவுளின் ஷடக்ஷர மந்த்ரத்திற்கேற்ப முகம் ஆறு, வாசுதேவனின் துவாதசாக்ஷரியே அவனது கேசவன், நாராயணன் முதலிய பன்னிரு மூர்த்திகள். இவ்வாறு ஒவ்வொரு மந்த்ரத்திற்கு மேற்ப ஓர் தனித்த மூர்த்தியும் தனிப்பட்ட வாகனமும், தனிப்பட்ட ஆயுதங்களும், பரிவாரங்களும் உண்டு. இவையெல்லாம் மந்த்ரத்தை உபாசித்து சாக்ஷாத்கரித்தவர்கள், அகக் கண் கொண்டு கண்டவர்கள், ஏனையோ

ருக்காக வெளிப்படையாக நிர்ணயித்துள்ளார்கள். அவ்வாறு உள்ளிருக்கும் அனுபவங்களை, புலனுக்கு அப்பாற்பட்ட நிலைகளை, வெளியில் புலன்களுக்கு எட்டு மாறு கூறும்போது, அந்த மூர்த்திகள் நம் மானிட புத்திக்கு அசம்பாவிதமாகத் தோன்றலாம். யானை முக முடைய கணபதி, பத்துக் கைகள் கொண்ட துர்க்கை, மூன்று கண்கள் கொண்ட சிவன், ஆறுமுக முருகன், நீலநிறக்கண்ணன் என்று மூர்த்திகளைக் கூறுவது நமது உடல் சாஸ்திரத்தின்படி ஏதோ அதிசயப் பிறவிகளைக் கூறுவதாகத் தோன்றலாம். ஆனால் இம்மூர்த்திகளின் வருணனை உள்ளே ஏற்படும் மாபெரும் அத்யாத்ம அனுபவத்தை அவ்வாறு அனுபவமில்லாதார் புரிந்து கொள்ளுமாறு செய்த பெரும் முயற்சி என்பதை மறத்தல் கூடாது. ஒரே மந்த்ரத்தை உபாசிப்போருக்கெல்லாம் ஒரேவிதமான மூர்த்தி புலப்படும் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும், ஏனெனில் மந்த்ரமே தேவதையின் சரீரம், மூர்த்தி. இதனால்தான் ஒவ்வொரு மந்த்ரத்திற்கும் தனிப்பட்ட தியான சுலோகம் உண்டு.

பரமசிவனின் ஐந்து முகங்களை ஸத்யோஜாதன், வாமதேவன், அகோரன், தத்புருஷன், ஈசானன் என்பர். இம் முகங்களை தனித்தனி மூர்த்திகளாகவும் கொள்வர். அவ்வாறே இந்த சுலோகங்களில் ஒவ்வொரு முகத்தையும் தனித்தனி மூர்த்திகளாக வர்ணித்திருக்கின்றது.

தத் புருஷன் என்ற மூர்த்திக்கு முகம் நான்கு, கண்கள் மூன்று. ஞானம், வரம், அபயம் இம்முத்திரைகளையும் கோடாலியையும் ஏந்திய கரங்கள் நான்கு. இம்மூர்த்தி, சிருஷ்டிக்கும் முன்னால், சலனமற்று, செயலற்று இருக்கும் பரமன். तत् (தத்) அது என்றும் पुरुषः (புருஷ:) புருஷன் என்றும் கூறப்படும் ஹிரண்மய ரூபன். இந்த தெய்வம் நம்மைக் கிழக்கு திக்கில் நின்று காக்க வேண்டும் என்று வேண்டப்படுகின்றது.

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि ।
तन्नो रुद्रः प्रचोदयात् ॥

தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி ।
தன்னோ ருத்ர: ப்ரசோதயாத் ॥

என்ற ருத்ரகாயத்ரீ இத்தேவனைப் போற்றும்.

कुठारखेटाङ्कुशशूलढक्का-
रुद्राक्षमालाग्निकणान् दधानः ।
चतुर्मुखो नीलरुचिस्त्रिनेत्रः
पायादघोरो दिशि दक्षिणस्याम् ॥ १० ॥

குடாரகேடாங்குஶஶூலடக்கா
ருத்ராக்ஷமாலாக்நிகணான் ததாந: ।
சதுர்முகோ நீலருசிஸ் த்ரிணேத்ர:
பாயாதகோரோ திஶி தக்ஷிணஸ்யாம் ॥ 10 ॥

चतुर्मुखः (சதுர்முக:) நான்கு முகமுடையவனும் नीलरुचिः (நீலருசி:) கருப்பு நிறமுடையவனும் त्रिनेत्रः (த்ரிணேத்ர:) மூன்று கண்கள் கொண்டவனும், कुठार-खेट-अङ्कुश-शूल-ढक्का-रुद्राक्षमाला अग्निकणान् (குடார-கேட-அங்குஶ - சூல-டக்கா – ருத்ராக்ஷமாலா - அக்னிகணான்)

கோடாலி, கேடயம் அங்குசம், சூலம், டமாரம், ருத்ராக்ஷ மாலை, நெருப்புப் பொறி இவைகளை दधानः (ததான:) தாங்கியவனுமான, अघोरः (அகோர:) அகோரன். दक्षिणस्यां दिशि (தக்ஷிணஸ்யாம் திசி) தெற்கு திக்கில் पायात् (பாயாத்) காப்பாற்றவேண்டும்,

சிருஷ்டிக்கும் முதற்பட்ட தத்புருஷன் என்ற மூர்த்தியை விளக்கி இப்போது சிருஷ்டியில் ப்ரக்ருதியுடன் சம்பந்தப்பட்ட மூன்று மூர்த்திகளைக் கூறுகின்றார். अजामेकां लोहितशुक्लकृष्णां (அஜாமேகாம் லோஹித சுக்ல க்ருஷ்ணாம்) என்று ச்ருதி சொல்லும் வண்ணம் முக்குணமான ப்ரக்ருதி சிருஷ்டியில் கருப்பு, வெளுப்பு, சிவப்பு என்று மூந்நிறம் பூண்டுத் திகழ்கின்றன. அந்த ப்ரக்ருதியுடன் சம்பந்தப்பட்ட மூர்த்திகளும் கருப்பு, வெளுப்பு சிவப்பு என்ற மூன்று நிறத்தில் அகோரன் ஸத்யோஜாதன் வாமதேவன் என்ற திவ்விய நாமம் பூண்டு விளங்குகின்றனர்.

அகோரன் என்றால் கோரமில்லாதவன், பயங்கரமில்லாதவன். இம் மூர்த்தியின் காக்கும் அம்சம் அதிகம். இம்மூர்த்தியிடமிருந்தே விஷ்ணுவின் தோற்றம் என்பர். புராணங்களில் சங்கரநாராயணனாய்த் தோன்றும் பரமசிவனின் கோரமான பாகம் சங்கரன் என்றும் அகோரமான பாகம் நாராயணன் என்றும் கூறுவர். घोराऽन्या शिवाऽन्या, (கோராந்யா பசிவாந்யா) या ते रुद्र शिवा तनूरघोरा पापकाशिनी (யா தே ருத்ர ஶிவா தநூரகோரா பாபகாசினீ) முதலிய ச்ருதி வாக்கியங்களைக் காண்க.

कुन्देन्दुशङ्खस्फटिकावभासो
वेदाक्षमालावरदाभयाङ्कः ।
त्र्यक्षश्चतुर्वक्त्र उरुप्रभावः
सद्योऽधिजातोऽवतु मां प्रतीच्याम् ॥ ११ ॥

குந்தேந்து ஸங்கஸ்படிகாவபாஸோ
வேதாக்ஷமாலா வரதாபயாங்க: ।
த்ர்யக்ஷஸ் சதுர்வக்த்ர உருப்ரபாவஸ்
ஸத்யோதிஜாதோவது மாம் ப்ரதீச்யாம்
॥ 11 ॥

कुन्द-इन्दु-शङ्ख-स्फटिक-अवभास: (குந்த இந்து சங்க ஸ்படிக அவபாஸ:) குந்த புஷ்பம், சந்திரன், சங்கு, படிகம் இவை போல் ஒளிர்கின்றவனும் वेदाक्षमाला वरदाभयाङ्क:(வேதாக்ஷமாலாவரதாபயாங்க:) வேதம், ஜபமாலை, வரம், அபயம் இவைகளை உடையவனும் त्र्यक्ष: (த்ர்யக்ஷ:) முக்கண்ணனும் चतुर्वक्त्र: (சதுர்வக்தர:) நான்கு முகமுடையவனும் उरुप्रभाव: (உருப்ரபாவ:) பெரும் ஆற்றல் படைத்தவனுமான सद्य: अधिजात: (ஸத்ய: அதிஜாத:) ஸத்யோஜாதன் मां (மாம்) என்னை प्रतीच्यां (ப்ரதிச்யாம்) மேற்கில் अवतु (அவது) காப்பாற்றட்டும்.

ஸத்யோஜாதன் என்றால் உடனே, அவ்வப்போது, பிறந்தவன் என்று பொருள். தெய்வ காரியம் நடக்க வேண்டுமென்றால் உடனே அதற்காகப் பிறந்து அதை நிறைவேற்றி மறையும் மூர்த்தி; மறுபடி வேண்டும் போது மறுபடி பிறப்பது – இவ்வாறு எப்போதும் அன்று பிறந்ததுபோல் இருக்கும் தெய்வக் குழந்தை.

வேத ரிஷிகள் மனிதனது உள்ளத்தில் தேவனின் அருள் தோன்றுவதை, ஞானம் உதிப்பதை, தெய்வக் குழந்தை மனிதனிடம் பிறப்பதாகக் கூறியுள்ளனர். ஒவ்வொரு தடவையும் உண்மை அறிவு தோன்றுவதை ஒவ்வொரு பிறப்பாக,

नवो नवो भवति जायमानः

நவோ நவோ பவதி ஜாயமான:

என்றபடி ஒவ்வொரு தடவையும் புத்தம் புதிதாக நோக்கவேண்டும்.

இந்த அறிவு மூப்பற்றது; என்றும் குழந்தை, இளமை வாய்ந்தது. இந்த அறிவுத் தெய்வத்தை 'ஸத்யோ ஜாதன்' "தக்ஷிணாமூர்த்தி"

वृद्धाः शिष्याः गुरुर्युवा

வ்ருத்தா: சிஷ்யா: குருர் யுவா

என்றபடி சிஷ்யர்கள் முதியோர்களாயினும் இளமை மாறாத ஆதி குரு என்பர். குந்த மலர், மதி, சங்கு, படிகம் இவைகளைப் பழிக்கும் வெள்ளை மேனி, வெள்ளை மனம் படைத்த பிள்ளை உருவம், வேதப் புத்தகம், ஜப மாலை ஏந்திய திருக்கரங்கள். இதுவே தக்ஷிணாமூர்த்தி, ஆண் உருவம் கொண்ட ஸரஸ்வதி, ஸத்யோஜாதன். பரமசிவனின் புதல்வனான குமாரக் கடவுளிடம் இந்த ஸத்யோஜாதனின் தன்மை விளங்குகின்றது. தந்தையே தனயனாகின்றான் என்று ஸத்யோ ஜாதனே சுப்பிரமணியசுவாமி எனலாம். ஏனெனில் அவன் குமாரன், என்றும் குமரன், மூப்பற்றவன், கௌமார தசையிலேயே இருப்பவன், பால சுப்பிரமணியன், தகப்பனுக்கும் சாமி, ஞானகுரு, குகன், குகையில் வளரும் கனல், அறியாமைத்தாரகனை என்றும் களையும் அறிவுச் சுடர், உலகின் முதலான ஓங்கார ஒலி.

सद्यो जज्ञानो निरिणाति शत्रून्

ஸத்யோ ஜக்ஞானே நிரிணுதி சத்ரூன்

என்று வேதம் வாழ்த்தும் வேலாயுதவேள்.

தந்தை தன் தனயனிடம் தோன்றுவதுபோல் குரு தன் சீடர்களிடம் தோன்றுவார். ஸத்யோஜாதன் என்ற தக்ஷிணுமூர்த்தியின் சீடர்கள் நான்கு பேர். அவர்களும் ஸத்யோஜாதனின் அம்சமே. ஸனகர், ஸநந்தனர், ஸனத்குமாரர், ஸனத் ஸுஜாதர் என்ற இந்த நால்வரும் மௌன குருவிடம் பாடம் கேட்கின்றனர். सनक:(ஸநக:) என்றால் ஸனாதனமான, என்றும் நிலையான என்று பொருள். सनन्दन: समाननन्दन: (ஸனந்தன: ஸமான நந்தன:) 'ஸத்யோஜாதன்' என்ற உடனே பிறந்த பரமனுக்குச் சமமான குழந்தை. सनत्कुमार: (ஸனத்குமார:) ஸனாதன குமாரன், என்றும் குமரன், सनत्सुजात: (ஸனத்ஸுஜாத:) என்றும் நன்கு பிறந்தவன். ஆகவே ஸத்யோஜாதனும், ஸனக ஸநந்தனாதிகளும், ஸ்கந்தனும் என்றும் இளமையான அப்பெரும் அறிவுத் தத்துவத்தையே குறிக்கின்றனர். ஸனத்குமாரரே ஸ்கந்தன் என்று சாந்தோக்கிய உபநிஷத் கூறும்.

'आहारशुद्धौ सत्त्वशुद्धिः सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः। तस्मै मृदितकषायाय तमसः पारं दर्शयति भगवान् सनत्कुमारः तं स्कन्द इत्याचक्षते तं स्कन्द इत्याचक्षते॥'

ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீனும் விப்ரமோக்ஷ: । தஸ்மை ம்ருதித கஷாயாய தமஸ: பாரம் தர்சயதி பகவான் ஸனத்குமார: தம் ஸ்கந்த இத்யாசக்ஷதே தம் ஸ்கந்த இத்யாசக்ஷதே.

"உட்கொள்வது சுத்தமாயின் இயல்பு சுத்தமாகும்; இயல்பு சுத்தமாயின் நினைப்பு நிரந்தரமாகும் ; நினைப்பு நிலைத்தால் எல்லா முடிச்சுகளும் அவிழும். அவ்வாறு மாசுகளைந்தவனுக்கு இருளின் கரையைக் காண்பிக்கின்றார் பகவான் ஸனத்குமாரர். அவரை ஸ்கந்தன் என்று கூறுகின்றனர். ஆம், அவரை ஸ்கந்தன் என்று கூறுகின்றனர்."

இந்த சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் ஸநத் குமாரரே ஸநத்ஸுஜாதர் என்று தமது ஸநத்ஸுஜாதீய பாஷ்ய முகவுரையில் ஆசார்ய சங்கரர் இவ்வாறு கூறியுள்ளார் :

सनत् इति सनातनं ब्रह्मोच्यते हिरण्यगर्भाख्यम् तस्मात् सनातनात् ब्रह्मणो मानसात ज्ञानवैराग्यादिसमन्वितः सुष्ठु जातः इति सनत्सुजात इत्युक्तो भगवान् सनत्कुमारः ॥

ஸனத் இதி ஸனாதனம் ப்ரஹ்மோச்யதே ஹிரண்யகர்பாக்யம் தஸ்மாத் ஸனாதனாத் ப்ரஹ்மணோ மானஸாத் ஞானவைராக்யாதி ஸமன்வித: ஸுஷ்டு ஜாத: இதி ஸனத்ஸுஜாத இத்யுக்தோ பகவாக் ஸனத்குமார: ॥

ப்ரஹ்மத்தின் மானஸபுத்திரன், மனதிலிருந்து நன்கு பிறந்தவன் (கர்ப்பத்திலிருந்து அல்ல) என்று கூறியிருப்பதைக் கவனிக்கவேண்டும். *

ஆகவே ஸத்யோ ஜாதன், குமாரன், ஸனகாதிகள் என்ற மூர்த்தி பேதங்கள் எல்லாம் ஒரே அபேதமான மூப்பற்ற அறிவுத் தத்துவத்தையே குறிக்கின்றன.

---

* ப்ரஹ்மஸ்ரீ கபாலி சாஸ்திரிகள் அவர்களின் உபநிடத விளக்கம் (Lights on the Upanishads) என்ற ஆங்கில நூலில் " ஸ்கந்த ஸநத்குமார " என்ற முதல் கட்டுரையைக் காண்க.

वराक्षमालाभयटङ्कहस्तः
सरोजकिञ्जल्क समानवर्णः ।
त्रिलोचनश्चारुचतुर्मुखो मां
पायादुदीच्यां दिशि वामदेवः ॥ १२ ॥

வராக்ஷமாலாபயடங்கஹஸ்த:
ஸரோஜகிஞ்ஜல்க ஸமானவர்ண: |
த்ரிலோசநஶ் சாருசதுர்முகோ மாம்
பாயாதுதீச்யாம் திஶி வாமதேவ: || 12 ||

वराक्षमालाभयटङ्कहस्तः வராக்ஷமாலாபயடங்கஹஸ்த:) **வரம்,** ஜபமாலை, அபயம், உளி இவைகளைக் கையில் உடையவனும் **सरोजकिञ्जल्कसमानवर्णः** (ஸரோஜகிஞ்சல்க ஸமானவர்ண:) தாமரை மலரின் கேஸரத்திற்குச் சமமான நிறமுடையவனும் **त्रिलोचनः** (த்ரிலோசன:) முக்கண்ணனும் **चारुचतुर्मुखः** (சாரு சதுர்முக:) அழகிய நான்கு முகங்களையுடையவனுமான **वामदेवः** (வாமதேவ:) வாமதேவன் **उदीच्यां दिशि** (உதீச்யாம் திஶி) வடக்கு திக்கில் **मां** (மாம்) என்னை **पायात्** (பாயாத்) காப்பாற்ற வேண்டும்.

वाम (வாம) என்றால் இடது என்ற பொருளைத் தவிர அழகு என்ற பொருளும் உண்டு. வாமதேவன் என்றால் அழகுத் தேவன், ஸௌந்தரேசன்; ஆகவே **चारुचतुर्मुखः** (சாரு சதுர்முக:) அழகிய நான்கு முகங்களை உடையவன் என வேதங்கள் கூறுகின்றது. பரமசிவனின் வாம பாகம் மிக அழகியது, அதுவே பார்வதி.

ஆகவே வாம தேவனிடம் சக்தியின் தத்துவம் அதிகம். முன் கூறிய ஸத்யோஜாதன் என்ற தக்ஷிணாமூர்த்தியும், இந்த வாமதேவனும் பரமசிவனின் வலது, இடது பாகங்கள்; அர்த்த நாரீச்வர ரூபத்தில் சிவனும் சக்தியும். दक्षिण (தக்ஷிண) என்றால் வலது वाम (வாம) என்றால் இடது என்பதை நினைவில் கொண்டால் இது தெளிவாகும். அதாவது தக்ஷிணாமூர்த்தி என்பதால் குறிக்கப்படும் அறிவும் வாமதேவன் என்பதால் குறிக்கப்படும் அழகும் ஆநந்தமும் பரமசிவனின் பாகங்கள். சிவன் அறிவு, சக்தி ஆநந்தம்.

பரமசிவன் ஸகல வித்யைகளுக்கும் ஆதி குரு; பார்வதி அவனது முதல் சிஷ்யை. ஸகல தந்த்ர சாஸ்திரங்களையும் முதலில் பரமசிவன் பார்வதிக்குக் கூறினதாகவே மரபு. பரமசிவன் தனது தக்ஷிணாமூர்த்தி என்ற வலது ரூபத்துடன் கூறியவை தக்ஷிணமார்க்கம் என்றும் தனது வாமதேவன் என்ற இடது ரூபத்துடன் கூறியவை வாம மார்க்கம் என்றும் இரு வழிகளாகக் கூறுவர். பண்டைய நாட்களில் ஒரே லக்ஷ்யத்தை அடைய, அறிவு வழி, ஆநந்த வழி என்று இந்த இரு வழிகளையும் பின்பற்றினர். பின்னாளில் வாமாசாரத்திற்குக் கெட்ட பெயர் ஏற்பட்டதன் காரணம், அவ்வழியைப் பின்பற்றினவரின் குறைபாடே; சரியாகப் புரிந்து கொள்ளாமல், பேரின்பமடையக் கூறியவைகளை சிற்றின்பத்திற்குப் பயன்படுத்திக்கொண்டதே அவ்வழியின் சீர்குலைவுக்குக் காரணம்.

பரமசிவனும் பார்வதியும் ஒன்று, இவர்களைத் தனியாகப் பிரிக்க முடியாது என்று பஞ்சாக்ஷர உபாஸகர்களும் ஸ்ரீ வித்யோபாஸகர்களும் அறிவர். இவர்களை இரண்டாகப் பார்ப்பவனுக்கும் மந்த்ரசித்திக்கும் மிக மிக தூரம். ஈச்வரியை ஸ்திரீ ரூபமாகவோ, புருஷ ரூபமாகவோ அல்லது இரண்டுமற்ற நிஷ்களமாகவோ நினைக்கலாம்.

स्त्रीरूपं वा स्मरेद्देवीं पुंरूपं वा विचिन्तयेत् ।
अथवा निष्कलं ध्यायेत् सच्चिदानन्दविग्रहाम् ॥

ஸ்த்ரீரூபம் வா ஸ்மரேத் தேவீம் பும்ரூபம் வா விசிந்தயேத் ।
அதவா நிஷ்கலம் த்யாயேத் ஸச்சிதானந்த விக்ரஹாம் ॥

என்று தந்த்ரம் கூறும். ஈச்வரியின் புருஷரூபமே இந்த வாமதேவன். ஸௌந்தரேசன், அழகன், லலிதையைப் போல் சிவந்த நிறமுடையவன். सरोजकिञ्जल्कसमानवर्णः (ஸரோஜகிஞ்ஜல்கஸமானவர்ண:)

वेदाभयेष्टाङ्कुशटङ्कपाश-
कपालढक्काक्षर शूलपाणिः ।
सितद्युतिः पञ्चमुखोऽवतान्मा-
मीशान ऊर्ध्वं परमप्रकाशः ॥ १३ ॥

வேதாபயேஷ்டாங்குஶ டங்க பாஶ
கபாலடக்காக்ஷர ஶூலபாணி: ।
ஸிதத்யுதி: பஞ்சமுகோவதாந் மாம்
ஈஶாந ஊர்த்வம் பரமப்ரகாஶ: ॥ 13 ॥

वेद-अभय-इष्ट-अङ्कुश-टङ्क-पाश- कपाल - ढक्का - अक्षर - शूलपाणिः (வேத – அபய – இஷ்ட – அங்குஶ – டங்க – பாஶ கபால – டக்கா – அக்ஷர – ஶூலபாணி:) வேதம், அபயம், வரம், அங்குசம், உளி, பாசம், மண்டையோடு,

டமாரம், வாள், சூலம் இவைகளைக் கையில் உடைய வனும் सितद्युतिः (ஸிதத்யுதி:) வெண்மையான காந்தி யுடையவனும் पञ्चमुखः (பஞ்சமுக:) ஐந்து முகமுடைய வனும் परमप्रकाशः (பரமப்ரகாஶ:) பெரும் ஒளியுமான ईशानः (ஈஶான:) ஈசானன் मां (மாம்) என்னை ऊर्ध्वं (ஊர்த்வம்) மேலே अवतात् (அவதாத்) காப்பாற்றவேண்டும்.

இந்த சிருஷ்டிக்கு அத்யக்ஷனாய் மேல் அமர்ந்து, ஒன்றிலும் கலவாது உதாஸீனமாய், ஆனால் அனைத்தை யும் கவனித்தவாறு இருக்கும் பெரும் ஒளி மயமான தேவனை ஈசானன் என்பர், ச்ருதி

ईशानः सर्वविद्यानामीश्वरः सर्वभूतानां
ब्रह्माधिपतिः ब्रह्मणोऽधिपतिः

ஈசான: ஸர்வவித்யாநாமீச்வர: ஸர்வபூதானும்
ப்ரஹ்மாதிபதி: ப்ரஹ்மணோதிபதி:

என்று இத்தேவனைக் கூறும். ஆகவே இத்தேவன் நம் மேலே இருந்து காக்கவேண்டும் என்று வேண்டப்படு கின்றது. முதலில் பஞ்ச பூதங்களிடமிருந்து காத்தலை விரும்பி, பிறகு பஞ்சமூர்த்திகளும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற நான்கு திசைகளிலும், தலைக்கு மேலும் நின்று ரக்ஷிக்கவேண்டும் என்று கூறப்படுகின் றது. ஸ்ரீ ருத்ரத்திலும்

दश प्राचीर्दश दक्षिणा दश प्रतीची-
र्दशोदीची र्दशोर्ध्वास्तेभ्यो नमः

தச ப்ராசீர் தச தக்ஷிணு தச ப்ரதீசீர்
தசோதீசீர் தசோர்த்வாஸ் தேப்யோ நம:

என்று கூறியிருப்பதைக் காண்க.

இப்போது தலையிலிருந்து ஆரம்பித்துக் கால்வரை ஒவ்வொரு அங்கத்தையும் பரமசிவனின் ஓர் தனிப்பட்ட விசேஷ உருவம் ரக்ஷிக்குமாறு கோரப்படுகின்றது.

मूर्धानमव्यान्मम चन्द्रमौलिः
फालं ममाव्यादथ फालनेत्रः ।
नेत्रे ममाव्याद्भगनेत्रहारी
नासां सदा रक्षतु विश्वनाथः ॥ १४ ॥

மூர்தானமவ்யாந் மம சந்த்ரமௌளி:
பாலம் மமாவ்யாதத பாலநேத்ர: ।
நேத்ரே மமாவ்யாத் பகநேத்ரஹாரீ
நாஸாம் ஸதா ரக்ஷது விஶ்வநாத: ॥ 14 ॥

चन्द्रमौलिः (சந்த்ரமௌளி:) முடியில் மதியணிந்தவன் मम (மம) என் मूर्धानं (மூர்தானம்) தலையை अव्यात् (அவ்யாத்) காக்க. अथ (அத) பிறகு फालनेत्रः (பாலநேத்ர:) நெற்றிக்கண்ணன் मम (மம) என் फालं (பாலம்) நெற்றியை अव्यात् (அவ்யாத்) காக்க. भगनेत्रहारी (பகநேத்ரஹாரீ)

சூரியனின் கண்ணைப் பிடுங்கியவன் **मम** (மம) என் **नेत्र** (நேத்ரே) கண்களை **अव्यात्** (அவ்யாத்) காக்க. **विश्वनाथः** (விஸ்வனாதஃ) அனைத்தின் இறைவன் **नासां** (நாஸாம்) மூக்கை **सदा** (ஸதா) எப்போதும் **रक्षतु** (ரக்ஷது) காக்க.

பரமசிவனின் தலையில் சந்திரன் இருக்கின்றான் என்பதும் அவனது நெற்றியில் மூன்றும் கண் உண்டு என்பதும் பிரசித்தம். அவனது படைப்பாகிய நமது தலையிலும் சந்திரன் இருக்கிறான், நமது நெற்றியிலும் ஓர் கண் இருக்கின்றது என்பதை அறியவேண்டும். நமது தலையில் ஸஹஸ்ராரம் என்ற ஓர் ரகசிய ஸ்தானம் இருப்பதாயும், அதுவே அமுதக்கடல், சந்திரனது இருப்பிடம், ஆனந்த ரசத்தின் உற்பத்தி ஸ்தானம் என்றும் யோக சாஸ்திரங்கள் கூறும். அவ்வாறே நெற்றியில் புருவங்களின் மத்தியில் ஆக்ஞா சக்ரம் என்ற ஓர் ரகசிய ஸ்தானம் உளது. இந்த ஸ்தானம் வேலை செய்ய ஆரம்பித்தால், அங்கு ஓர் திவ்விய திருஷ்டி உண்டாகும். மூன்றாவது கண் ஏற்பட்டு இதுவரை ஊனக் கண்ணிற்குப் புலனாகாதவை எல்லாம் புலப்படும். அதற்காகவே சந்திர மௌலி தலையைக் காக்கவேண்டும் என்றும் நெற்றிக்கண்ணன் நெற்றியைக் காக்கவேண்டும் என்றும் கோரப்படுகின்றது.

தக்ஷனது யாகத்தை ஸம்ஹாரம் செய்யும்போது அங்கு வந்திருந்து, அந்த அசுர கார்யத்திற்கு உடந்தையாயிருந்த தேவர்களையும் ஈசன் விடவில்லை. சூரியனது கண்ணைப் பிடுங்கிவிட்டார் என்று கதை. அதாவது அந்தந்த தேவர்களின் சக்தியைப் போக்கிவிட்டார் என்று பொருள். சூரியன் உலகத்தின் கண்; பரமபுருஷனின் கண் **चक्षोः सूर्यो अजायत** (சக்ஷோ: ஸூர்யோ அஜாயத) **तच्चक्षुः देवहितं पुरस्तात्** (தச்சக்ஷு: தேவஹிதம் புரஸ்தாத்) உலகின் கண்கண்ட தெய்வம், கண்ணின் தத்துவமாகிய

ஒளியின் இருப்பிடம். தேவகாரியத்திற்குப் பயன்படாத அந்த சக்தியை சூரியனிடமிருந்து எடுத்துவிட்டார் என்று பொருள். அத்தேவன் நம் கண்களைக் காக்க வேண்டும் என்றால் திவ்விய ஒளியைப் பார்க்குமாறு செய்யவேண்டும். அசுர காரியத்திலிருந்து நம் பார்வையைத் திருப்பவேண்டும்.

पायाच्छ्रुती मे श्रुतिगीतकीर्तिः
कपोलमव्यात् सततं कपाली ।
वक्त्रं सदा रक्षतु पञ्चवक्त्रो
जिह्वां सदा रक्षतु वेदजिह्वः ॥ १५ ॥

பாயாத் ஶ்ருதீ மே ஶ்ருதிகீதகீர்த்தி:
கபோலமவ்யாத் ஸததம் கபாலீ ।
வக்த்ரம் ஸதா ரக்ஷது பஞ்சவக்த்ரோ
ஜிஹ்வாம் ஸதா ரக்ஷது வேதஜிஹ்வ:
॥ 15 ॥

श्रुतिगीतकीर्तिः (ஶ்ருதிகீதகீர்த்தி:) மறைபாடும் புகழோன் मे (மே) எனது श्रुती (ஶ்ருதீ) காதுகளை पायात् (பாயாத்) காக்க, कपाली (கபாலீ) மண்டையோட்டை உடையோன் सततं (ஸததம்) எப்போதும் कपोलं (கபோலம்) கன்னத்தை अव्यात् (அவ்யாத்) காக்க, पञ्चवक्त्रः (பஞ்சவக்த்ர:) ஐந்து வாய்கள் உடையோன் सदा (ஸதா) எப்போதும் वक्त्रं (வக்த்ரம்) வாயை रक्षतु (ரக்ஷது) காக்க. वेदजिह्वः (வேதஜிஹ்வ:) வேதத்தை நாக்காக உடையோன்

सदा (ஸதா) எப்போதும் जिह्वां (ஜிஹ்வாம்) நாக்கை रक्षतु (ரக்ஷது) காக்க.

வேதத்தை அபௌருஷேயம் என்கிறோம். ஏனெனில் ரிஷிகள் மனதால் எண்ணி வேதத்தை எழுதினார்கள் அல்லர். மிக உயர்ந்த அத்யாத்ம நிலைகளில் இருந்த அவர்களின் காதுகளுக்கு கடவுளின் வாக்கு ஸ்பஷ்டமாக எட்டிற்று. कवयः सत्यश्रुतः (கவய: ஸத்ய ஶ்ருத:) உண்மை காண்போர் ஸத்தியம் கேட்போர் என்று வேதம் கூறும். அந்த காதுகளுக்கு எட்டிய வாக்கே, வேதம். ஆகவே அதற்குக் கேள்வி श्रुति (ஶ்ருதி) என்று பெயர். அந்த திவ்விய சிரவணம், உலகப் பேரிரைச்சலின் இடையே பரமனின் வாக்கைக் கேட்கும் திறன், நமக்கும் கிட்டவேண்டும் என்பதற்காக ச்ருதி பாடும் கீர்த்தியை உடையோன் நம் ச்ருதி (காது)யைக் காக்க வேண்டும் என்றனர்.

அவ்வேதமே பரமனின் நாக்கு. அதாவது பரமன் நமக்குப் பேசுவது வேதத்தின் மூலமே. ஏனெனில் வேதம் என்பது சாதாரணப் புத்தகமல்ல, எவர் மண்டையிலோ உதித்த கற்பனை அல்ல. அரும் ஞானம் பொதிந்த மாபெரும் மறை. ஈசனிடமிருந்தே உதித்த அருளாவேச வாக்கு, அந்த வாக்குகளை ரிஷிகள் ஏற்று நமக்கு அருளினார்கள், அவ்வளவுதான். வாக்கு பரமனின் வாக்கு. ஆகவே வேதம் அவனது நாக்கு என்றனர். சாதாரண மன்னர்களின் நாவசைந்தாலே நாடசையும். அம்மன்னர் மன்னனான பரமனின் நாவசைந்தால் அண்ட சராசரங்களனைத்தும் அசையும் என்பதில் என்ன சந்தேகம்? ஆகவே வேதவாக்கு என்றால் உலகில் அத்தனை மதிப்பு. அப்பரமன் நம் நாக்கைக் காத்து அதில் எப்போதும் சத்தியவாக்கே வருமாறு செய்யவேண்டும்.

पञ्चवक्त्रः (பஞ்சவக்த்ர:) என்பதை முன்பே நன்கு விளக்கியுள்ளோம்.

कण्ठं गिरीशोऽवतु नीलकण्ठः
पाणिद्वयं पातु पिनाकपाणिः ।
दोर्मूलमव्यान्मम धर्मबाहुः
वक्षस्थलं दक्षमखान्तकोऽव्यात् ॥ १६ ॥

கண்டம் கிரீசோவது நீலகண்ட:
பாணித்வயம் பாது பிநாகபாணி: ।
தோர்மூலமவ்யாந் மம தர்மபாஹு:
வக்ஷஸ்தலம் தக்ஷமகாந்தகோவ்யாத் ॥ 16 ॥

गिरिश: (கிரீச:) மலையின் இறையான नीलकण्ठ: (நீலகண்ட:) நஞ்சுண்ட கண்டன் कण्ठं (கண்டம்) கழுத்தை अवतु (அவது) காக்க, पिनाकपाणि: (பிநாகபாணி:) பிநாகம் என்ற வில்லைக் கையில் உடையோன் पाणिद्वयं (பாணித்வயம்) கைகளிரண்டையும் पातु (பாது) காக்க, धर्मबाहु: (தர்மபாஹு:) தர்மத்தையே கையாக உடையவன் मम (மம) எனது दोर्मूलं (தோர்மூலம்) அக்குளை अव्यात् (அவ்யாத்) காக்க, दक्षमखान्तक: (தக்ஷமகாந்தக:) தக்ஷனின் யாகத்தை அழித்தவன் वक्षस्थलं (வக்ஷஸ்தலம்) மார்புப்பிரதேசத்தை अव्यात् (அவ்யாத்) காப்பாற்றுக.

धर्मबाहु: (தர்மபாஹு:) என்றால் எப்போதும் தர்ம ரக்ஷணம் செய்பவன் என்று பொருள். बाहु: (பாஹு:) புஜம் என்பது பலத்தின் அறிகுறி; காப்பாற்றும் திறனின் சங்கேதம்.

தக்ஷ ப்ரஜாபதி ஓர் பெரும் யாகம் நடத்தினான். அதில் மற்ற எல்லா தேவர்களுக்கும் ஹவிர்பாகம் அளித்தான். சிவனை அழைக்கவில்லை. தன் மகளான

தாக்ஷாயணியையும் அவமதித்தான். ஆகவே பரமசிவன் கடுங்கோபம் கொண்டு தக்ஷனது யாகத்தை நிர்மூலமாக்கிவிட்டார். दक्ष (தக்ஷ) என்ற பதத்திற்கு திறமை, நிபுணத்துவம் என்று பொருள். தன் திறமையில் மிகவும் நம்பிக்கை வைத்து, சகல காரியங்களும் தன்னுலேயே நடக்கின்றன, அதில் ஈசனுக்கு ஓர் பங்கும் இல்லை என்ற அகந்தை நிறைந்த நினைப்பையே தக்ஷயாகக் கதை குறிக்கின்றது. இந்த அகந்தையை ஒழித்துவிடுவதையே ஈசன் தக்ஷயாகத்தை அழித்தான் என்கிறோம். ஒவ்வொரு மனிதனும் 'நான், நான்' என்று சொல்லும்போது தனது மார்பைத் தொட்டுப் பேசுகின்றான். ஆகையால் அந்த உண்மையான 'நான்' என்பதின் இருப்பிடம் ஹ்ருதயமே. இது பகவான் ஸ்ரீரமண மகர்ஷிகளின் உபதேசம். தக்ஷயாகத்தை அழித்தவன், அதாவது அகந்தையை அழிப்பவன் உண்மையான 'நான்' என்பதின் இருப்பிடத்தைக் காப்பாளுக.

ममोदरं पातु गिरीन्द्रधन्वा
मध्यं ममाव्यान्मदनान्तकारी ।
हेरम्बतातो मम पातु नाभिं
पायात् कटिं धूर्जटिरीश्वरो मे ॥ १७ ॥

மமோதரம் பாது கிரீந்த்ரதந்வா
மத்யம் மமாவ்யாந் மதநாந்தகாரீ ।
ஹேரம்பதாதோ மம பாது நாபிம்
பாயாத் கடிம் தூர்ஜடிரீஸ்வரோ மே
॥ 17 ॥

गिरीन्द्रधन्वा (கிரீந்த்ரதந்வா) மேருமலையை வில்லாகக் கொண்டவன் मम (மம) எனது उदरं (உதரம்) வயிற்றை पातु (பாது) காக்க, मदनान्तकारि (மதனாந்தகாரீ) காமனை முடித்தவன் मम (மம) எனது मध्यं (மத்யம்) இடுப்பை अव्यात् (அவ்யாத்) காக்க, हेरम्बतात: (ஹேரம்பதாத:) கணபதியின் தந்தை मम (மம) எனது नाभिं (நாபிம்) கொப்பூழை पातु (பாது) காக்க, धूर्जटि:(தூர்ஜடி:) பெரும் சடையுடைய ईश्वर: (ஈஸ்வர:) ஈசன் मे (மே) எனது कटिं (கடிம்) பிருஷ்டத்தை पायात् (பாயாத்) காக்க.

பரமசிவன் திரிபுர ஸம்ஹாரம் செய்தபோது, வேதங்களைக் குதிரைகளாக்கி பூமி என்ற தேரில் பூட்டி, நான்முகனை சாரதியாக்கி மேரு மலையை வில்லாக வளைத்து விஷ்ணுவை அம்பாக்கி யுத்தம் செய்தான் என்பர். அதை யொட்டியே गिरीन्द्रधन्वा (கிரீந்த்ரதந்வா) என்று சொல்லப்பட்டது.

ऊरुद्वयं पातु कुबेरमित्रो
जानुद्वयं मे जगदीश्वरोऽव्यात् ।
जङ्घायुगं पुङ्गवकेतुरव्यात्
पादौ ममाव्यात् सुरवन्द्यपादः ॥ १८ ॥

ஊருத்வயம் பாது குபேரமித்ரோ
ஜானுத்வயம் மே ஜகதீஸ்வரோவ்யாத் ।
ஜங்காயுகம் புங்கவகேது ரவ்யாத்
பாதௌ மமாவ்யாத் ஸுரவந்த்யபாத: ॥ 18 ॥

कुबेरमित्रः (குபேரமித்ர:) குபேரனின் நண்பன் ऊरुद्वयं (ஊருத்வயம்) தொடைகளிரண்டையும் पातु (பாது) காக்க, जगदीश्वरः (ஜகதீஸ்வர:) உலகின் இறைவன் मे(மே) எனது जानुद्वयं (ஜாநுத்வயம்) முழங்கால்கள் இரண்டையும் अव्यात् (அத்யாத்) காக்க, पुङ्गवकेतुः (புங்கவகேது:) காளைக் கொடியோன் जङ्घायुगं (ஜங்காயுகம்) கணுக் கால்கள் இரண்டையும் अव्यात् (அவ்யாத்) காக்க, सुरवन्द्यपादः (ஸுரவந்த்யபாத:) தேவர் வணங்கும் பாதன் मम (மம) எனது पादौ (பாதௌ) பாதங்களை अव्यात् (அவ்யாத்) காக்க.

எட்டு திக்பாலர்களில் குபேரனும் ஈசனும் வடக்கு, வடகிழக்கு, இந்த திசைகளுக்குத் தலைவர்கள். அருகில் இருப்பதால் ஈசனை குபேரனின் நண்பன் என்றும் குபேரனை ஈசனின் நண்பன் என்றும் கூறுவர். நிதிகளுக்கெல்லாம் நாயகனான குபேரனிடம் ஐச்வர்யம் என்றும் தங்கி இருப்பதன் காரணம் அவன் ஈச்வரனின் நண்பன். தெய்வ வழியில் நடப்பவன்.

இவ்வாறு தலை முதல் பாதம்வரை உடலிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் ஈசனின் ஒவ்வொரு மூர்த்தி ரக்ஷிக்க வேண்டும் என்று கூறிய பிறகு, காலம், தேசம் இவ்விரண்டும் எப்படி இருந்தபோதிலும், பாதுகாப்பு வேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகின்றது.

महेश्वरः पातु दिनादियामे
मां मध्ययामेऽवतु वामदेवः ।
त्र्यम्बकः पातु तृतीययामे
वृषध्वजः पातु दिनान्त्ययामे ॥ १९ ॥

மஹேஶ்வர: பாது திநாதியாமே
மாம் மத்யயாமேவது வாமதேவ: ।
த்ர்யம்பக: பாது த்ருதீயயாமே
வ்ருஷத்வஜ: பாது திநாந்த்யயாமே ॥ 19 ॥

दिनादियामे (திநாதியாமே) தினத்தின் முதல் ஜாமத்தில் **महेश्वर:** (மஹேஶ்வர:) மகேச்வரன் **पातु** (பாது)காக்க, **मध्ययामे** (மத்யயாமே) நடு ஜாமத்தில் **मां** (மாம்) என்னை **वामदेव:** (வாமதேவ:) வாமதேவன் **अवतु** (அவது) காக்க, **तृतीययामे** (த்ருதீயயாமே) மூன்றும் ஜாமத்தில் **त्र्यम्बक:** (த்ர்யம்பக:) திரியம்பகன் **पातु** (பாது) ரக்ஷிக்க, **दिनान्त्ययामे** (திநாந்த்யயாமே) தினத்தின் கடைசி ஜாமத்தில் **वृषध्वज:** (வ்ருஷத்வஜ:) எருதுக்கொடியோன் **पातु** (பாது) காக்க.

त्र्यम्बक: (த்ர்யம்பக:) என்றால் முக்கண்ணன் என்று பொருள் கூறுவர். **अम्बिका** (அம்பிகா) என்பது தாயாரைக் கூறுகின்றது, **अम्बक** (அம்பக) என்றால் தந்தை. மூன்றுக்கும், அதாவது பூமி, ஆகாயம், ஸ்வர்க்கம் என்ற மூன்று உலகங்களுக்கும் தந்தையே திரியம்பகன். மனிதனது அன்னமய கோசத்தில் புஷ்டியை அளிப்பவன். அவனைச் சாவிலிருந்து விடுவித்து சாகாமைக்கு அழைத்துச் செல்லும் ம்ருத்யுஞ்ஜயன். இத்தேவனது மந்த்ரம் :

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्यो र्मुक्षीय माऽमृतात् ॥

த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தனம் |
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத் ||

என்பது. தியானத்திற்காக உள்ள சில வேதரிக்குகளில் இது ஒன்று. மாபெரும் சக்தி வாய்ந்தது.

பரமசிவனின் வாகனம் வ்ருஷபம், எருது, காளை. அவனது கொடியும் அதுவே. ஒவ்வொரு தேவதைக்கும் ஓர் தனிப்பட்ட வாகனம் உண்டு. தெய்வ சக்தியை எது தாங்குகின்றதோ, எது வகிக்கின்றதோ, அது வாகனம். தெய்வம்தான் தெய்வத்தைத் தாங்க முடியும். ஆகவே வாகனம் ஆரோகணிக்கும் தெய்வத்தின் அம்சம். மனிதன் தெய்வத்தின் வாகனமானால், அதாவது, தெய்வ சக்தியைத் தாங்கினால், அவன் தெய்வத்தின் அம்சமாகின்றான். மகாவிஷ்ணுவை ஆதிசேஷன் தாங்குகின்றான்; ஆதிசேஷனே மகாவிஷ்ணுவின் அம்சம் என்று கூறினால் இப்போது விளங்கும். ஆதிசேஷன் என்றால் ஆயிரந் தலையுள்ள பெரும்பாம்பு என்று கூறினால் உண்மை விளங்காது. ஆதிசேஷன் என்றால் ஆதியிலுள்ள சேஷன், முதலில் எஞ்சிய பொருள் என்று உணர்ந்தால் தத்துவம் தெளிவாகும். அவ்வாறே வ்ருஷபம் என்றால் காளை மாடு என்று நினைத்துக் கொண்டால் உண்மை புலனாகாது. இந்த வ்ருஷபமே மகாதேவன்.

चत्वारि शृङ्गास्त्रयो अस्य पादाः द्वे शीर्षे सप्त हस्तासो अस्य ।
त्रिधा बद्धो वृषभो रोरवीति महोदेवो मर्त्यान् आविवेश ॥

சத்வாரி ச்ருங்காஸ் த்ரயோ அஸ்ய பாதா:
த்வே சீர்ஷே ஸப்த ஹஸ்தாஸோ அஸ்ய ।
த்ரிதா/பத்தோ வ்ருஷபோ ரோரவீதி
மஹோதேவோ மர்த்யாம் ஆவிவேச ॥

ரிக்வேதம் IV. 58. 3.

"நான்கு கொம்புகள், மூன்று கால்கள், இரண்டு தலைகள், ஏழு கைகள் இதற்கு. மும்விதமாய் கட்டுண்ட இந்த விருஷபம் முக்காரம் போடுகின்றது; இந்த ஒளி மயமான தேவன் மரிக்கும் மனிதரில் பிரவேசித்தான்" என்று வாமதேவரின் தரிசனம் கூறும். ஆகவே விருஷபம் என்றால் காளைமாடு அல்ல.

வேத ரிஷிகள் தங்களது மந்திரங்களில் சாதாரணப் பதங்களை உபயோகித்தே ரகசியப் பொருள்களைப் புகட்டினர். வடமொழியில் ஓர் பதத்திற்கு இரண்டு மூன்று அர்த்தங்கள் இருப்பதால் இது சுலபம். ஆகவே ரகசியமறியாத பாமர மக்கள் வெளிப்பொருளை மாத்திரம் எடுத்துக்கொண்டு திருப்தி அடைந்தனர். அறிவுக் கண் படைத்தவர் உட்பொருளை உணர்ந்தனர். गो (கோ) என்ற வடமொழிச் சொல்லுக்குப் பசு என்று பொருள். கிரணம் என்றும் பொருள். ஓர் ஒளியிடும் அறிவு, அறியாமையைத் தொலைக்கும் ஓர் பிரகாசம் இதைக் குறிக்க गो (கோ) என்று மறைபொருளாக உபயோகித்தனர். உயர்ந்த அறிவை गोपति (கோபதி) பசுக்களின் தலைவன், காளை எனக் குறித்தனர். ஆகவே वृषभ: (விருஷப:) காளை என்ற பதம் உயர்ந்த அறிவையும் ஆண்மை, அதாவது பலத்தையும் குறிக்கும் சொல்லாயிற்று. தவிர அறிவை வர்ஷிப்பவன், பொழிபவன் वृषा (விருஷா) वृषभ: (விருஷப:) என்று இந்திரனைக் குறித்தனர். பசுக்களிடையே காளை போல் தேவர்களிடையே இந்திரன் விளங்குகின்றான் என்றெல்லாம் ரிக்குகள் கூறும். वृष् (விருஷ்) வர்ஷித்தல் என்ற தாதுவிலி

ருந்து ஆண்மையும் அறிவையும் பொழியும் தேவன் वृषा (வ்ருஷா) वृषभः (வ்ருஷப:) என்று புராணங்களில் பரமசிவனைக் குறித்தன. பிறகு விருஷபத்தையே சிவனது வாகனமாக்கி விட்டன.

'यश्छन्दसामृषभो विश्वरूपः' (யஶ்சந்தஸாம் ருஷபோ விச்வரூப:) என்ற தைத்திரிய ச்ருதியும் 'ருஷப' என்ற பதத்தின் உட்பொருள் உணர்ந்தால்தான் தெளிவாகும். இந்தக் கவசத்தைக் கூறுபவர் ரிஷப யோகிச்வரர் என்பதையும் நினைவில் கொள்க.

மேற்கூறிய வாமதேவரின் ரிக்கு வ்ருஷபனென மகாதேவனைக் குறிப்பது என்றோம். ஸ்ரீ பதஞ்ஜலி தமது மகாபாஷ்யத்தில் இது சப்த ப்ரும்மத்தைக் குறிப்பது என்கிறார். ஏனெனில் வியாகரண ஸித்தாந்தத்தின் படி மகாதேவனே சப்தப்ரும்மம், அவர் தனது உடுக்கையை அடித்தபோது எழுந்த நாதமே என்றும் அழியாத ஸம்ஸ்க்ருத அக்ஷரங்கள்.

पायान्निशादौ शशिशेखरो मां
गङ्गाधरो रक्षतु मां निशीथे ।
गौरीपतिः पातु निशावसाने
मृत्युञ्जयो रक्षतु सर्वकालम् ॥ २० ॥

பாயாந் நிஶாதௌ ஶஶிஶேகரோ மாம்
கங்காதரோ ரக்ஷது மாம் நிஶீதே ।
கௌரீபதி: பாது நிஶாவஸாநே
ம்ருத்யுஞ்ஜயோ ரக்ஷது ஸர்வகாலம் ॥ 20 ॥

निशादौ (நிஶாதௌ) இரவின் ஆரம்பத்தில் मां(மாம்) என்னை शशिशेखर: (ஶஶிஶேகர:)சந்திரனைத் தலையிலணிந்தோன் पायात् (பாயாத்) காக்க, निशीथे (நிஶீதே) நள்ளிரவில் मां (மாம்) என்னை गङ्गाधर: (கங்காதர:) கங்கையை தரிப்போன் रक्षतु (ரக்ஷது) காக்க, निशावसाने(நிஶாவஸாநே) இரவின் முடிவில் गौरीपति: (கௌரீபதி:) கௌரியின் நாயகன் पातु (பாது) காக்க, सर्वकालं (ஸர்வகாலம்) எல்லா காலத்திலும் मृत्युञ्जय: (ம்ருத்யுஞ்ஜய:) யமனை வென்றவன் रक्षतु (ரக்ஷது) காக்க.

ம்ருத்யுஞ்ஜயன் என்ற மூர்த்தியை உபாஸிப்போர் யமனிடம் பயப்படார்,

उर्वारुकमिव बन्धनान्मृत्यो र्मुक्षीय माऽमृतात्

உர்வாருகமிவ பந்தநாந் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

பழுத்த வெள்ளரிப்பழம் எவ்வாறு தோலிலிருந்து கழலுமோ, அவ்வாறு அவனை உபாஸிப்போர் சாவிலிருந்து கழலுவர்; அமரத்தன்மையிலிருந்து அல்ல.

ஆகவே ம்ருத்யுஞ்ஜயனின் பாதுகாப்பு நமக்கு ஸர்வகாலமும் வேண்டும்.

अन्तः स्थितं रक्षतु शंकरो मां
स्थाणुः सदा पातु बहिः स्थितं माम्।
तदन्तरे पातु पतिः पशूनां
सदाशिवो रक्षतु मां समन्तात् ॥ २१ ॥

அந்த: ஸ்திதம் ரக்ஷது ஶங்கரோ மாம்
ஸ்தாணு: ஸதா பாது பஹி: ஸ்திதம் மாம் ।
ததந்தரே பாது பதி: பஶூனாம்
ஸதாஶிவோ ரக்ஷது மாம் ஸமந்தாத் ॥ 21 ॥

मां (மாம்) என்னை अन्त: स्थितं (அந்த: ஸ்திதம்) உள்ளே இருக்கையில் शङ्कर: (ஶங்கர:) மங்களத்தைச் செய்பவன் रक्षतु (ரக்ஷது) காக்க வேண்டும். मां (மாம்) என்னை बहि: स्थितं (பஹி: ஸ்திதம்) வெளியில் இருக்கையில் सदा (ஸதா) எப்போதும் स्थाणु: (ஸ்தாணு:) நிலையானவன் पातु (பாது) காக்க வேண்டும். तदन्तरे (ததந்தரே) நடுவில் இருக்கையில் पशूनां (பஶூநாம்) பிராணிகளின் पति: (பதி:) நாயகன் पातु (பாது) காக்க வேண்டும், मां (மாம்) என்னை समन्तात् (ஸமந்தாத்) சுற்றிலும் सदाशिव: (ஸதாஶிவ:) நித்தியமங்கள ரூபன் रक्षतु (ரக்ஷது) காக்க வேண்டும்.

பிராணிகளை பசுக்கள் என்றும் பிராணிகளின் தலைவனை ஈசனை பதி என்றும் ஈசனுக்கும் பிராணிகளுக்குமிடையே உள்ள பிணைப்பை பாசம் என்றும் கூறுவர். இதுவே சைவ சமயத்தின் சித்தாந்தம். மாட்டு மந்தைகளை ஓட்டிச் செல்லும் இடையன் கயிற்றை உபயோகிப்பதுபோல், பசுவாகிற ஜீவராசிகளை பாசத்தின் மூலமே பசுபதி நடத்திச் செல்கின்றான்.

तिष्ठन्तमव्याद्भुवनैकनाथः
पायाद्व्रजन्तं प्रमथाधिनाथः ।
वेदान्तवेद्योऽवतु मां निषण्णं
मामव्ययः पातु शिवः शयानम् ॥ २२ ॥

திஷ்டந்தமவ்யாத் புவனைகநாத:
பாயாத் வ்ரஜந்தம் ப்ரமதாதிநாத: ।
வேதாந்தவேத்யோவது மாம் நிஷண்ணம்
மாமவ்யய: பாது ஶிவ: ஶயாநம் ॥ 22 ॥

भुवनैकनाथः (புவனைகநாத:) உலகின் தனித்தலைவன் **तिष्ठन्तं** (திஷ்டந்தம்) நிற்கும் என்னை **अव्यात्** (அவ்யாத்) காக்க, **प्रमथाधिनाथः** (ப்ரமதாதிநாத:) ப்ரமதகணங்களின் நாயகன் **व्रजन्तं** (வ்ரஜந்தம்) போகும் என்னை **पायात्** (பாயாத்) காக்க, **वेदान्तवेद्यः** (வேதாந்தவேத்ய:) வேதத்தின் இறுதியால் அறியப்படுபவன் **निषण्णं** (நிஷண்ணம்) உட்காரும் **मां** (மாம்) என்னை **अवतु** (அவது) காக்க, **अव्ययः** (அவ்யய:) அழிவற்ற **शिवः** (ஶிவ:) சிவன் **शयानं** (ஶயானம்) படுக்கும் **मां** (மாம்) என்னை **पातु** (பாது) காக்க.

நாம் நிற்கும்போது, போகும்போது, உட்காரும்போது, படுக்கும்போது எல்லா நிலைகளிலும் பாது காப்பு வேண்டும் என்று கோரப்படுகின்றது.

मार्गेषु मां रक्षतु नीलकण्ठः
शैलादिदुर्गेषु पुरत्रयारिः ।
अरण्यवासादिमहाप्रवासे
पायान्मृगव्याध उदारशक्तिः ॥ २३ ॥

மார்கேஷு மாம் ரக்ஷது நீலகண்ட:
ஶைலாதி துர்கேஷு புரத்ரயாரி: ।
அரண்யவாஸாதி மஹாப்ரவாஸே
பாயான் ம்ருகவ்யாத உதாரஶக்தி: ॥ 23 ॥

मार्गेषु (மார்கேஷு) பாதைகளில் **मां** (மாம்) என்னை **नीलकण्ठः** (நீலகண்ட:) நீலகண்டன் **रक्षतु** (ரக்ஷது) காக்க, **शैलादिदुर्गेषु** (ஶைலாதிதுர்கேஷு) மலை முதலிய ஆபத்தான இடங்களில் **पुरत्रयारिः** (புரத்ரயாரி:) முப்புரத்தின் எதிரி (காக்க), **अरण्यवासादिमहाप्रवासे** (அரண்யவாஸாதி மஹாப்ரவாஸே) காட்டில் வசிப்பது முதலிய பெரும் வெளிப் பிரயாணங்களில் **उदारशक्तिः** (உதாரஶக்தி:) பரந்த ஆற்றல் மிக்க **मृगव्याधः** (ம்ருகவ்யாத:) கிராத மூர்த்தி **पायात्** (பாயாத்) காக்க.

ஊரை விட்டு வெளியூர்களில் பிரயாணம் செய்யும் போது வழியில் நீலகண்டனும், மலை முதலிய கரடு முரடான இடங்களில் புரமெரித்தவனும், காடுகள் வழியாகச் செல்லும்போது, துஷ்ட மிருகங்களிடமிருந்து நம்மைக் காக்க, வேட வேஷம் போட்ட பரமசிவனும் வேண்டும் என்கிறார். அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் அருளிய மூர்த்தியைத் தான் கிராதன், வேடன் என்று கூறுவர்.

அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறவேண்டி கோர மான தவம் செய்யும்போது, அவனைக் கொல்ல துரி யோதனனால் ஏவப்பட்ட ஓர் அசுரன் பன்றி உருவம் எடுத்து வரவும், அப்பன்றியைக் கொன்று பக்தரை ரக்ஷிக்க கைலாசத்தின் அதிபதி பரமசிவனே வேட வேஷம் பூண்டுவந்தார் என்று கதை. பன்றியை அர் ஜுனனும் வேடனும் ஒரே சமயத்தில் அம்பெய்து வீழ்த்தவே, அதுகாரணமாக அர்ஜுனனுக்கும் அவ னுக்கும் பெரும்போர் மூண்டுக் கடைசியில் வேடதாரி யான வேடன் தன் சுய உருவைக் காண்பித்து பாசுப தாஸ்திரம் கொடுத்தது ஈசனின் பல்வேறு திருவிளை யாடல்களில் ஒன்று. காட்டில் அர்ஜுனனை துஷ்ட மிருகத்திடமிருந்து காத்த அந்த வேடமூர்த்தி நம்மை யும் காட்டில் கொடிய விலங்குகளிடமிருந்து காப்பான்.

कल्पान्तकालोग्रपटुप्रताप-
स्फुटाट्टहासोच्चलिताण्डकोशः ।
घोरारिसेनार्णवदुर्निवार-
महाभयाद्रक्षतु वीरभद्रः ॥ २४ ॥

கல்பாந்த காலோக்ர படுப்ரதாப
ஸ்புடாட்டஹாஸோச்சலிதாண்டகோஶ: ।
கோராரி ஸேனார்ணவ துர்நிவார
மஹாபயாத் ரக்ஷது வீரபத்ர: ॥ 24 ॥

कल्पान्तकाल-उग्रपटुप्रताप-स्फुटाट्टहास-उच्चलिताण्डकोशः (கல்பாந்தகால உக்ரபடுப்ரதாப - ஸ்புடாட்டஹாஸ - உச்சலிதாண்ட கோஶ:) கல்பத்தின் முடிவு காலத்தில் பயங்கரமான

பெரும் ஆற்றல் கொண்டு, வெடிக்கும் கடும் சிரிப்பால் தூரப்போய் விழும் அண்டகோசங்களை உடைய **वीरभद्रः** (வீரபத்ர:) வீரபத்ரன் **घोरारिसेनार्णवदुर्निवारमहाभयात्** (கோராரி ஸேனார்ணவ துர்நிவார மஹாபயாத்) கோரமான பகைவரின் படைக்கடலால் ஏற்படும் தடுக்கமுடியாத பெரும் பீதியிலிருந்து **रक्षतु** (ரக்ஷது) காக்கவேண்டும்.

சிருஷ்டி என்பது ஓர் மலர்ச்சி, விகாஸம்; பரமனின் முகமலர்ச்சியே சிருஷ்டிக்குக் காரணம். அவனது முகத்தில் புன்முறுவல் படர்ந்தால் உடனே அண்டகோசங்கள் ஆகாயத்தில் படரும்.

हसिताङ्कुरस्य गर्भे विश्वोद्भवमूलसंमदं दधती (ஹஸிதாங்குரஸ்ய கர்பே விச்வோத்பவமூலஸம்மதம் தததீ) 'நகை அரும்பின் கருவில் உலகின் உற்பத்திக்கு அடிகோலும் உவகையை தரிக்கின்றாய்' என்று தம் மகாமனுஸ்தவத்தில் ப்ரஹ்மஸ்ரீ கபாலி சாஸ்திரிகள் கூறியுள்ளார்கள்.

இந்தப் புன்னகை மகிழ்ச்சியில் தோன்றுவது. கோபத்தில் தோன்றும் சிரிப்பு பெருநகை, ஏளனம் நிறைந்த அட்டஹாஸம். மந்தஹாஸம் சிருஷ்டிக்கும், அட்டஹாஸம் அழிக்கும்.

प्रीतिविकासे स्वल्पतमो रोषविशेषे भूरितरः (ப்ரீதிவிகாஸே ஸ்வல்பதமோ ரோஷவிசேஷே பூரிதர:) என்று கணபதி முனிவரும் அன்னையின் சிரிப்பை வர்ணித்துள்ளார்.

ஓர் கல்பம் முடிந்து பிரளயம் ஏற்படும்போது பரமசிவனின் ஸம்ஹார மூர்த்தியான வீரபத்ரன் கடுங்கோபங்கொண்டு பெருத்த அட்டஹாஸம் செய்கின்றான். மிகுந்த சக்தியுடன் உள்ளிருந்து வெடித்துவரும் அந்த நகைப்பின் ஒலியில் அண்டகோசங்கள் தூர ஓடி-

விழுகின்றன. அவ்வாறு ஆற்றல் படைத்த வீரபத்திரனின் பாதுகாப்பைக் கோருகின்றார். அவன் மாபெரும் வீரனாயினும் பத்ரன் மங்களகரமானவன். சத்துருக்களின் சேனை ஓர் சமுத்திரம் போல் திரண்டு நம்நாட்டை நோக்கி வந்து பெரும் பீதியை உண்டாக்கினும், வீரபத்திரனின் துணை நமக்கு இருக்கும்போது, வேறு என்ன வேண்டும்?

पत्यश्वमातङ्गघटावरूथिनो
सहस्रलक्षायुतकोटिभीषणम् ।
अक्षौहिणीनां शतमाततायिनां
छिन्द्यान्मृडो घोरकुठारधारया ॥ २५ ॥

பத்யஶ்வ மாதங்ககடா வரூதிநோ
ஸஹஸ்ர லக்ஷாயுத கோடிபீஷணம் ।
அக்ஷௌஹிணீனாம் ஶதமாததாயினாம்
சிந்த்யாந் ம்ருடோ கோரகுடாரதாரயா
॥ 25 ॥

आततायिनां (ஆததாயினாம்) கொலைபாதகர்களின் पत्यश्वमातङ्गघटावरूथिनः (பத்யஶ்வ மாதங்ககடா வரூதிந:) காலாள், குதிரை, யானைக்கூட்டம், தேர் இவைகளாலான सहस्रलक्षायुतकोटिभीषणं (ஸஹஸ்ரலக்ஷாயுதகோடி பீஷணம்) ஆயிரம், பத்தாயிரம், லக்ஷம், கோடி என்று பயங்கரமான अक्षौहिणीनां शतं (அக்ஷௌஹிணீனாம் ஶதம்)

நூற்றுக்கணக்கான அக்ஷௌஹிணிகளை मृड: (ம்ருட:) சிவன் घोरकुठारधारया (கோரகுடார தாரயா) கோரமான கோடாலி முனையால் छिन्द्यात् (சிந்த்யாத்) வெட்டித் தள்ளவேண்டும்.

கொலைபாதகர்களின் சேனைகள் கணக்கிலடங்காது நாட்டைப் படையெடுத்து வந்தாலும் சிவன் தனது கோடாலி முனையால் அவைகளை வெட்டி வீழ்த்துவாராக. அக்ஷௌஹிணி என்பது சதுரங்க சேனையில் ரத, கஜ, துரக, பதாதி இவைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் ஓர் அளவு.

एको रथो गजश्चैको नराः पञ्च पदातयः ।
त्रयश्च तुरगास्तज्ज्ञैः पत्तिरित्यभिधीयते ॥
पत्तिं त्रिगुणितामेनां विदुः सेनामुखं बुधाः ।
त्रीणि सेनामुखान्येको गुल्म इत्यभिधीयते ॥
त्रयो गुल्मा गणो नाम वाहिनी तु गणत्रयम् ।
स्मृताः तिस्रोऽथ वाहिन्यः पृतनेति विचक्षणैः ॥
चमूस्तु पृतनास्तिस्रः ताश्च तिस्रस्त्वनीकिनी ।
अनीकिनीं दशगुणामाहुरक्षौहिणीं बुधाः ॥

ஏகோ ரதோ கஜச்சைகோ நரா: பஞ்ச பதாதய: |
த்ரயச்ச துரகாஸ்தஜ்ஞை: பத்திரித்யபிதீயதே ||
பத்திம் த்ரிகுணிதாமேநாம் விது: ஸேநாமுகம் புதா: |
த்ரீணி ஸேநாமுகான்யேகோ குல்ம இத்யபிதீயதே ||
த்ரயோ குல்மா கணோ நாம வாஹிநீ து கணத்ரயம் |
ஸ்ம்ருதா: திஸ்ரோத வாஹிந்ய: ப்ருதனேதி விசக்ஷணை: ||
சமூஸ்து ப்ருதநாஸ்திஸ்ர: தாச்ச திஸ்ரஸ்த்வனீகினீ |
அனீகினீம் தசகுணமாஹு ரக்ஷௌஹிணீம் புதா: ||

"ஒரு தேர், ஒரு யானை, ஐந்து காலாள், மூன்று குதிரைகள் கொண்டது ஒரு பத்தி; மூன்று பத்திகள் கொண்டது ஒரு சேனாமுகம்; மூன்று சேனா முகங்களாலானது ஒரு குல்மம்; மூன்று குல்மங்கள் ஓர் கணம்; அவ்வாறே மூன்று கணங்கள் ஓர் வாஹினி; மூன்று வாஹினிகள் சேர்ந்தது ஓர் ப்ருதனா; ப்ருதனைகள் மூன்று கூடினால் சமூ; மூன்று சமூ ஓர் அனிகினி; பத்து அனிகினி ஓர் அக்ஷௌஹிணி" என்று மகாபாரதம் கூறும். இதன்படி ஓர் அக்ஷௌஹிணியில் 1,09,350 காலாட்களும் 65,610 குதிரைகளும், 21870 தேர்களும் 21870 யானைகளும் அடங்கி இருக்கும்.

निहन्तु दस्यून् प्रलयानलार्चिः
ज्वलत्त्रिशूलं त्रिपुरान्तकस्य ।
शार्दूलसिंहर्क्षवृकादिहिंस्रान्
सन्त्रासयत्वीशधनुः पिनाकः ॥ २६ ॥

நிஹந்து தஸ்யூன் ப்ரலயாநலார்ச்சி:
ஜ்வலத் த்ரிஶூலம் த்ரிபுராந்தகஸ்ய ।
ஶார்தூலஸிம்ஹர்க்ஷவ்ருகாதிஹிம்ஸ்ரான்
ஸந்த்ராஸயத்வீஶதனு: பிநாக: ॥ 26 ॥

त्रिपुरान्तकस्य (த்ரிபுராந்தகஸ்ய) முப்புரம் முடித்தவனின் प्रलयानलार्चिः (ப்ரலயானலார்ச்சி:) ஊழிக்கனல்போல் ஒளிரும் ज्वलत् (ஜ்வலத்) ஜ்வலிக்கும் त्रिशूलं (த்ரிஶூலம்) திரிசூலம் दस्यून् (தஸ்யூன்) அசுரர்களை निहन्तु (நிஹந்து) அடித்துக்கொல்க. ईशधनुः (ஈஶதனு:)

ஈசனின் வில்லான पिनाकः (பிநாக:) பினாகம் शार्दूलसिंह-ऋक्षवृकादिहिंस्रान् (சார்தூல ஸிம்ஹர்க்ஷவ்ருகாதி ஹிம்ஸ்ரான்) புலி, சிங்கம், கரடி, ஓநாய் முதலிய கொடிய விலங்குகளை संत्रासयतु (ஸம்த்ராஸயது) வெருட்டி ஓட்டுக.

தேவன் கையில் ஆயுதங்களை ஏந்தி இருப்பது பக்தர்களைப் பாதுகாக்கவே.

दैत्यानां देहनाशाय भक्तानामभयाय च ।
धारयन्त्यायुधानीत्थं देवानां च हिताय वै ॥

தைத்யாநாம் தேஹநாசாய பக்தாநாமபயாய ச ।
தாரயந்த்யாயுதாநீத்தம் தேவாநாம் ச ஹிதாய வை ॥

"அவுணர்களை அழிப்பதற்கும் அடியாரின் பய மொழிப்பதற்கும், அமரரின் நன்மைக்கும் இவ்வாறு ஆயுதங்களைத் தாங்குகின்றாய்" என்று தேவீ மாஹாத்ம்யம் கூறும்.

அவ்வாறே ஈசனின் திரிசூலம் அவுணர்களை அழித்து, அவனது பினாகம் கொடிய விலங்குகளிடமிருந்து அபயத்தை அளித்து நம்மைக் காக்கவேண்டும்.

दुःस्वप्नदुश्शकुन दुर्गतिदौर्मनस्य-
दुर्भिक्षदुर्व्यसनदुस्सहदुर्यशांसि ।
उत्पाततापविषभीतिमसद्ग्रहार्तिं
व्याधींश्च नाशयतु मे जगतामधीशः ॥ २७॥

துஸ்வப்ன துஶ்ஶகுன துர்கதி தௌர்மனஸ்ய
துர்பிக்ஷ துர்வ்யஸன துஸ்ஸஹ துர்யஶாம்ஸி ।
உத்பாததாப விஷபீதி மஸத்க்ருஹார்த்திம்
வ்யாதீம்ஶ்ச நாஶயது மே ஜகதாமதீஶ: ॥ 27 ॥

मे (மே) எனது दुःस्वप्न दुश्शकुन दुर्गति दौर्मनस्य दुर्भिक्ष दुर्व्यसन दुस्सह दुर्यशांसि (துஸ்வப்ன துஶ்ஶகுன துர்கதி தௌர்மனஸ்ய துர்பிக்ஷ துர்வ்யஸன துஸ்ஸஹ துர்யஶாம்ஸி) கெட்ட கனவு, கெட்ட சகுனம், கெட்ட நிலைமை, மனவாட்டம், பஞ்சம், கெட்ட பழக்கம், பொறுமை அபகீர்த்தி இவைகளையும் उत्पाततापविषभीतिं (உத்பாததாபவிஷபீதிம்) உற்பாதம், வெப்பம், விஷம் இவைகளால் பயத்தையும் असद्गृहार्तिं (அஸத்க்ருஹார்த்திம்) பொல்லாத வீட்டுப் பீடைகளையும் व्याधींश्च (வ்யாதீம்ஶ்ச) வியாதிகளையும் जगतां अधीशः (ஜகதாம் அதீஶ:) உலகங்களின் அதிபதி नाशयतु (நாஶயது) நாசம் செய்ய வேண்டும்.

இந்தக் கடைசி சுலோகத்தில் எல்லாவிதமான கெடுதல்களையும் உலகின் இறைவன் ஒழிக்க வேண்டும் என்று வேண்டப்படுகின்றது.

தண்டகம்

கவசத்துடன் இதைப் பலர் பாராயணம்
செய்வது வழக்கம்

ओं नमो भगवते सदाशिवाय सकलतत्त्वात्मकाय सकल-
तत्त्वविदूराय सकललोकैककर्त्रे सकललोकैकभर्त्रे सकललोकैकसंहर्त्रे
सकललोकैकगुरवे सकललोकैकसाक्षिणे सकलनिगमगुह्याय सकललोक-
वरप्रदाय सकलदुरितार्तिभञ्जनाय सकलजगदभयङ्कराय शशाङ्कशेखराय
शाश्वतनिजावासाय निराभासाय निरामयाय निरातङ्काय निष्कलङ्काय
निष्प्रपञ्चाय निर्द्वन्द्वाय निस्सङ्गाय निर्मलाय निर्गुणाय निरुपमविभवाय
निराधाराय नित्यसिद्धपरिपूर्णसच्चिदानन्दाद्वयाय परमशान्तप्रकाशाय
तेजोरूपाय तेजोमयाय तेजोऽधिपतये ।

ஓம் நமோ பகவதே ஸதாசிவாய ஸகலதத்வாத்மகாய ஸகல
தத்வவிதூராய ஸகலலோகைககர்த்ரே ஸகலலோகைகபர்த்ரே ஸகல
லோகைகஸம்ஹர்த்ரே ஸகலலோகைககுரவே ஸகலலோகைக
ஸாக்ஷிணே ஸகலநிகமகுஹ்யாய ஸகலலோகவரப்ரதாய ஸகல
துரிதார்த்திபஞ்ஜநாய ஸகலஜகதபயங்கராய சசாங்கசேகராய சாச்வத
நிஜாவாஸாய நிராபாஸாய நிராமயாய நிராதங்காய நிஷ்கலங்காய
நிஷ்ப்ரபஞ்சாய நிர்த்வந்த்வாய நிஸ்ஸங்காய நிர்மலாய நிர்குணாய
நிருபமவிபவாய நிராதாராய நித்யஸித்தபரிபூர்ணஸச்சிதாநந்தாத்
வயாய பரமசாந்தப்ரகாசாய தேஜோரூபாய தேஜோமயாய தேஜோ
திபதயே ।

ஓம். வணக்கம், ஸர்வ வல்லமையுள்ள ஸதா சிவனுக்கு, ஸகலதத்துவங்களின் உருவானவனுக்கு, ஸகலதத்துவங்களுக்கு அப்பாற்பட்டவனுக்கு, ஸகல உலகின் தனிக்கர்த்தனுக்கு, ஸகல உலகின் தனிரக்ஷக னுக்கு, ஸகல உலகைத் தன்னந்தனியனாய் அழிப்பவ னுக்கு, ஸகல உலகின் தனிப்பெருங்குருவிற்கு, ஸகல உலகைத் தனியனாய்ப் பார்த்துக்கொண்டிருப்பவனுக்கு, ஸகல வேதத்தின் ரகசியப்பொருளுக்கு, ஸகல உலகிற் கும் வரமளிப்போனுக்கு, இன்னல், வருத்தமனைத்தை யும் முறிப்பவனுக்கு, உலகனைத்திற்கும் அபயமளிப்போ னுக்கு, மதியை முடியில் அணிந்தவனுக்கு, சாசுவத இருப்பிடமுடையோனுக்கு, தோற்றமற்றவனுக்கு, பிணியற்றவனுக்கு, நோயற்றவனுக்கு, மாசற்றவ னுக்கு, விரிவற்றவனுக்கு, இருமையற்றவனுக்கு, பற்றற்றவனுக்கு, அழுக்கற்றவனுக்கு, குணமற்றவ னுக்கு, ஒப்பற்ற மகிமையோனுக்கு, புலனையற்றவ னுக்கு, என்றும் சித்தமாய், முழுவதாய், ஸத், சித், ஆனந்தம் என்பதிலிருந்து இரண்டு படாதவனுக்கு, மிகவும் அமைதியாய் ஒளிர்பவனுக்கு, ஒளி உருவ மானவனுக்கு, ஒளிமயமானவனுக்கு, ஒளிகளுக்கெலாம் தலைவனுக்கு வணக்கம்.

जय जय महारुद्र महारौद्र भद्रावतार महाभैरव कालभैरव कल्पान्तभैरव कपालमालाधर खट्वाङ्गचर्मखड्गधर पाशाङ्कुशडमरुकत्रिशूलचापबाणगदाशक्तिभिन्दिबालतोमरमुसलमुशुण्डिमुद्गर प्रासपरिघ शतघ्नीचक्रायुध भीषणाकार सहस्रमुख दंष्ट्राकरालवदन विकटाट्टहासविस्फारितब्रह्माण्डमण्डल नागेन्द्रकुण्डल नागेन्द्रहार नागेन्द्रवलय नागेन्द्रचर्मधर नगेन्द्रनिकेतन मृत्युंजय त्र्यम्बक त्रिपुरान्तक विरूपाक्ष विश्वेश्वर वृषभवाहन विश्वरूप विश्वतोमुख सर्वतोमुख।

ஜய ஜய மஹாருத்ர மஹாரௌத்ர பத்ராவதார மஹாபைரவ காலபைரவ கல்பாந்தபைரவ கபாலமாலாதர கட்வாங்கசர்மகட்கதர பாசாங்குசடமருகத்ரிசூலசாபபாணகதாசக்தி பிந்திபாலதோமரமுஸல புசுண்டிமுத்கரப்ராஸபரிக சதக்னீ சக்ராயுத பீஷணாகார ஸஹஸ்ரமுக தம்ஷ்ட்ராகராலவதன விகடாட்டஹாஸ விஸ்பாரித ப்ரஹ்மாண்ட மண்டல நாகேந்த்ரகுண்டல நாகேந்த்ரஹார நாகேந்த்ரவலய நாகேந்த்ரசர்மதர நகேந்த்ரநிகேதன ம்ருத்யுஞ்ஜய த்ரியம்பக த்ரிபுராந்தக விரூபாக்ஷ விச்வேச்வர வ்ருஷபவாஹன விச்வரூப விச்வதோமுக ஸர்வதோமுக।

வெல்க, வெல்க. மகாருத்ரனே; மிகவும் பயங் கரனே; மங்கலவடிவினனே; மகாபைரவனே; காலபைர வனே; கல்பத்தின் முடிவில் பீதி அளிப்பவனே; மண்டையோட்டு மாலையை அணிபவனே; மண்டை யோட்டை முனையில் பொருத்திய கழி, கேடயம் கத்தி இவைகளைத் தரிப்பவனே; பாசக்கயிறு, அங்குசம் உடுக்கை, திரிசூலம், வில், அம்பு, கதை, வேல், உடை வாள், இரும்புக் குண்டாந்தடி, உலக்கை, கணை, சம்மட்டி, ஈட்டி, இரும்புப் பூண் போட்ட கைக்கழி, சதக்னி, (நூறுபேர்களை ஒரேசமயத்தில் கொல்லும் ஓர் ஆயுதம்) சக்கரம் இந்த ஆயுதங்களை உடையவனே; கோரமான தோற்றமுடையவனே; ஆயிரம் முகமுடைய வனே; கோரைப்பல்லால் பீதியளிக்கும் வாயை உடைய வனே; கோரமான பெருநகைப்பால் அண்டங்களனைத் தையும் கிடுகிடுக்க வைப்பவனே; நாகராஜனை குழை யாக அணிந்தவனே: நாகராஜனை மாலையாக அணிந்த வனே; நாகராஜனை வளையலாகக் கொண்டவனே: யானைத்தோல் தரித்தவனே; மலைமன்னனை இருப்பிட மாகக் கொண்டோனே; யமனை வெல்பவனே; மூவுல கின் தந்தையே: முப்புரத்தை முடித்தவனே; குரூப மாய் கண்களை உடையவனே; அனைத்திற்கும் இறையே; இடபவாகனனே; அனைத்தின் உருவே; அனைத்திலும் முகமுடையோனே; எங்கும் முகமுடையோனே.

मां रक्ष रक्ष ज्वल ज्वल प्रज्वल प्रज्वल महामृत्युभयं शमय शमय
अपमृत्युभयं नाशय नाशय रोगभयं उत्सादयोत्सादय विषसर्पभयं शमय
शमय चोरान् मारय मारय मम शत्रून् उच्चाटयोच्चाटय शूलेन
विदारय विदारय कुठारेण भिन्धि भिन्धि खड्गेन छिन्धि छिन्धि
खट्वाङ्गेन विपोथय विपोथय मुसलेन निष्पेषय निष्पेषय बाणैः
संताडय संताडय रक्षांसि भीषय भीषय भूतान् विद्रावय विद्रावय
कूष्माण्डभूतवेतालमारीगणब्रह्मराक्षसान् संत्रासय संत्रासय मम अभयं
कुरु कुरु वित्रस्तं मामाश्वासय आश्वासय नरकभयात् मामुद्धरोद्धर
संजीवय संजीवय क्षुत्तृष्णार्तं मामाप्याय आप्याय दुःखातुरं मामा-
नन्दय आनन्दय शिवकवचेन मामाच्छादय आच्छादय हर हर
मृत्युञ्जय त्र्यम्बक सदाशिव परमशिव नमस्ते नमस्ते नमस्ते नमः ॥

மாம் ரக்ஷ ரக்ஷ ஜ்வல ஜ்வல ப்ரஜ்வல ப்ரஜ்வல மஹாம்ருத்யு-
பயம் சமய சமய அபம்ருத்யுபயம் நாசய நாசய ரோகபயம் உத்ஸா-
தயோத்ஸாதய விஷஸர்பபயம் சமய சமய சோராந் மாரய மாரய மம
ச‌த்ருந் உச்சாடயோச்சாடய சூலேன விதாரய விதாரய குடாரேண
பிந்தி பிந்தி கட்கேன சிந்தி சிந்தி கட்வாங்கேன விபோதய
விபோதய முஸலேன நிஷ்பேஷய நிஷ்பேஷய பாணை: ஸம்தாடய
ஸம்தாடய ரக்ஷாம்ஸி பீஷய பீஷய பூதான் வித்ராவய வித்ராவய
கூஷ்மாண்டபூதவேதாலமாரிகணப்ரஹ்மராக்ஷஸான் ஸம்த்ராஸய
ஸம்த்ராஸய மம அபயம் குரு குரு வித்ரஸ்தம் மாமாச்வாஸய ஆச்வா-
ஸய நரகபயாத் மாமுத்தரோத்தர ஸம்ஜீவய ஸம்ஜீவய
க்ஷுத்த்ருஷ்ணார்தம் மாமாப்யாயய ஆப்யாயய துக்காதுரம் மாமா
நந்தய ஆனந்தய சிவகவசேன மாமாச்சாதய ஆச்சாதய ஹர ஹர
ம்ருத்யுஞ்ஜய த்ர்யம்பக ஸதாசிவ பரமசிவ நமஸ்தே நமஸ்தே
நமஸ்தே நம: ||

என்னைக் காப்பாற்று, காப்பாற்று. ஜ்வலி, ஜ்வலி நன்கு ஜ்வலி, நன்கு ஜ்வலி. பெரும் யமபயத்தைத் தணி, தணி. அபம்ருத்யுவால் ஏற்படும் பீதியைத் தொலை, தொலை. ரோகத்தால் ஏற்படும் பயத்தை நாசமாக்கு நாசமாக்கு. விஷப்பாம்பு பயத்தைத் தணி தணி, திருடர்களை சாகடி, சாகடி.. எனது பகைவர்களை விரட்டு, விரட்டு. சூலத்தால் கிழித்துத் தள்ளு, கிழித்துத் தள்ளு, கோடாலியால் பிளந்துவிடு, பிளந்துவிடு. வாளால் அறுத்தெறி, அறுத்தெறி. மண்டையோட்டை முனையில் பொருத்திய கழியால் துகை, துகை. . உலக்கையால் அரைத்துத் தள்ளு, அரைத்துத் தள்ளு. கணைகளால் அடி, அடி. ராக்ஷஸர்களை பயமுறுத்து, பயமுறுத்து. பூதங்களை ஓட்டு ஓட்டு. பிசாசு, பூதம் வேதாளம், தொத்துநோய், ப்ரும்மராக்ஷஸ் இவைகளை வெருட்டி ஓட்டு, வெருட்டி ஓட்டு. எனக்கு அபயமளி, அபயமளி. பயந்த எனக்கு ஆறுதலளி, ஆறுதலளி. நரகபீதியிலிருந்து என்னைக் கைதூக்கிவிடு. கைதூக்கிவிடு. உயிரளி, உயிரளி. பசி, தாகத்தால் வாடிய என்னைப் போஷிப்பாய், போஷிப்பாய். துக்கத்தால் நொந்த என்னை மகிழ்விப்பாய் மகிழ்விப்பாய். சிவகவசத்தால் என்னைப் போர்த்து போர்த்து. ஹரஹர யமனை வெல்வோனே, மூவுலகத் தந்தையே, ஸதாசிவனே, பரமசிவனே, வணக்கம், உனக்கு வணக்கம், உனக்கு வணக்கம், உனக்கு வணக்கம்.

*பலச்ருதி

ऋषभ उवाच।

ரிஷபர் கூறினார்:

इत्येतत्परमं शैवं कवचं व्याहृतं मया ।
सर्वबाधाप्रशमनं रहस्यं सर्वदेहिनाम् ॥

இத்யேதத் பரமம் சைவம் கவசம் வ்யாஹ்ருதம் மயா |
ஸர்வபாதா ப்ரசமநம் ரஹஸ்யம் ஸர்வதேஹிநாம் ||

இவ்வாறு இந்த உயர்ந்த சிவகவசத்தை நான் கூறிவிட்டேன். ரகசியம் இது. எல்லாப் பிராணிகளின் பீடைகளனைத்தையும் போக்கவல்லது.

यः सदा धारयेन्मर्त्यः शैवं कवचमुत्तमम् ।
न तस्य जायते क्वापि भयं शम्भोरनुग्रहात् ॥

ய: ஸதா தாரயேந் மர்த்ய: சைவம் கவசமுத்தமம் |
ந தஸ்ய ஜாயதே க்வாபி பயம் சம்போரநுக்ரஹாத் ||

எம்மனிதன் இவ்வுயர்ந்த சிவகவசத்தை எப்போதும் தரிக்கின்றானோ, அவனுக்கு சிவனருளால் எங்கிருந்தும் பயம் ஏற்படுவதில்லை.

---

*இதன் கருத்தை அறிய விரும்புவோர் இவ்வாசிரியரின் **மஹிஷமர்தினீஸ்தவ** உரையில் பலச்ருதிப் பகுதியைக் காண்க.

क्षीणायुः प्राप्तमृत्युर्वा महारोगहतोऽपि वा ।
सद्यः सुखमवाप्नोति दीर्घमायुश्च विन्दति ॥

க்ஷீணாயு: ப்ராப்தம்ருத்யுர் வா மஹாரோகஹதோபி வா ।
ஸத்ய: ஸுகமவாப்னோதி தீர்கமாயுச்ச விந்ததி ॥

அல்ப ஆயுள் உடையவனாயினும், சாவை நெருங்கியவனாயினும், கடும்ரோகத்தால் பீடிக்கப்பட்டவனாயினும் உடனே சுகமடைகின்றான். நீண்ட ஆயுளையும் பெறுகின்றான்.

सर्वदारिद्र्यशमनं सौमङ्गल्यविवर्धनम् ।
यो धत्ते कवचं शैवं स देवैरपि पूज्यते ॥

ஸர்வதாரித்ர்ய சமநம் ஸௌமங்கல்ய விவர்தநம் ।
யோ தத்தே கவசம் சைவம் ஸதேவைரபி பூஜ்யதே ॥

தரித்திரத்தை எல்லாம் போக்குவது, நல்ல மங்களங்களைப் பெருக்குவது. எவன் சிவகவசத்தை தரிக்கின்றானோ தேவரும் அவனைத் தொழுகின்றனர்.

महापातकसंघातैर्मुच्यते चोपपातकैः ।
देहान्ते मुक्तिमाप्नोति शिववर्मानुभावतः ॥

மஹாபாதகஸங்காதைர் முச்யதே சோபபாதகை: ।
தேஹாந்தே முக்திமாப்னோதி சிவவர்மானுபாவத: ॥

சிவகவச மகிமையால் மாபெரும் பாதகங்களி லிருந்து எல்லாம் விடுவிக்கப்படுகிறான். இவ்வுடல் முடிந்தவுடன் முக்தி பெறுகிறான்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ	6	0	0
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்	1	4	0
கனகதாரா ஸ்தோத்ரம்	0	12	0

(தேவநாகரம், க்ரந்தம், தமிழ் லிபிகளில் ப்ரதிபத அர்த்தத்துடனும் விரிவான தாத்பர்யத்துடனும் கூடியது).

மனீஷா பஞ்சகம்	0	12	0
கணேச பஞ்சரத்னம்	0	4	0
லலிதா பஞ்சரத்னம்	0	5	0
கௌரீதசகம்	0	8	0
சாரதாபுஜங்கப்ரயாதாஷ்டகம்	0	8	0
ஆனந்தலஹரீ	0	8	0
ஹனுமத் பஞ்சரத்னம்	0	4	0

இதர புஸ்தகங்கள்

சங்கர விஜயம்	0	6	0
மீனாக்ஷி பஞ்சதசி ஸ்தோத்ரம்	0	5	0
ஸப்த ஸ்துதி	0	5	0
துர்கா ஸ்தோத்ரம்	0	12	0

(தேவநாகரம், க்ரந்தம் தமிழ் லிபிகளில் ப்ரதிபத அர்த்தத்துடனும் விரிவான தாத்பர்யத்துடனும் கூடியது,)

ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ	1	2	0

[ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் ப்ரயோகம், யந்தரம், பூஜை செய்ய வேண்டிய க்ரமம், பூஜாபலன்களுடன்].

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	0	6	0
ருத்ரம் சமகம் [நாகர லிபியில் ஸ்வரத்துடன்]	0	4	0
புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், துர்கா ஸூக்தம் ,,	0	4	0
இந்த்ராக்ஷி சிவகவசம்	0	4	0

(பாராயணத்திற்குரியது மூலம் மட்டும்)

ஸ்ரீஜகன்மாதா லலிதா பரப்ரும்மமூர்த்தி படம்	0	12	0
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய யந்த்ரம்	0	8	0

ஸ்ரீ S. சங்கரநாராயணன், M.A.
அவர்களால் எழுதப்பட்டுள்ள
இதர புஸ்தகங்கள்

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்

ஸ்ரீவித்யையின் விளக்கம், லலிதை, காளி, ச்யாமளா முதலிய மூர்த்திகளின் தத்துவம், சாதனைக்குறிப்புகள், அந்தர்யாக முறை, லலிதா அஷ்டோத்தர சதநாமாவளி இவை அடங்கியுள்ளது,

—முகப்பில் லலிதா காமேச்வரியின் அழகிய திரு உருவப்படம்—

விலை அணா 10

❊

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம்

ஸ்ரீசங்கரரின் கராவலம்பன ஸ்தோத்திரம். ஸ்தோத்ர வரலாறு, நரசிம்ம மூர்த்தியின் தத்துவம், உபாசனை, இம்மூர்த்திக்கும் ருத்ரனுக்குமுள்ள ஒற்றுமை. விளக்கம் முதலிய அடங்கியுள்ளது.

விலை அணா 6

❊

மஹிஷ மர்த்தினீ ஸ்தவம்

(தேவீ மாஹாத்ம்யத்தில் நான்காம் அத்யாயம்)

மகேச்வரி, மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாஸரஸ்வதி என்ற நான்கு மஹாசக்திகளின் வர்ணனை, சிருஷ்டிரகசியம், வேள்விதத்துவம், முதலிய அரும்பெரும் விஷயங்கள் அடங்கியுள்ளது,

—முகப்பில் மஹாலக்ஷ்மியின் அழகிய திரு உருவப்படம்—

விலை ரூபாய் 2